
# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | மார்கழி-01 | 16-12-2004 | வியாழக்கிழமை | ஓசை -302





உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்

R.V.பந்தல் சேவை

முல்லைச்சாலை, தருமபுரம். T.P:0712-610008 (சி-10931) விநாயகர் வீதி, மயிலிட்டி.


# சமாதான முயற்சிகள் தொடர்பில் சனாதிபதி தீர்க்கமான நிலைப்பாட்டை தெரிவிக்க வேண்டும்

### -அமெரிக்கா, ஐ.ஒன்றியம், ஜப்பான் கூட்டாக, வலியுறுத்து

நோர்வேயின் அனுசரணைப்பணி மற்றும் சமாதான முயற்சிகள் தொடர்பில் சிறிலங்கா அரசின் தீர்க்கமான நிலைப்பாட்டை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உடனடியாக தெளிவுபடுத்த வேண்டியது அவசியம் என டோக்கியோ உதவி வழங்கும் நாடுகள் மாநாட்டிற்கு இணைத்தலைமை வழங்கிய நாடுகள் சிறிலங்காஅரசைக் கேட்டுள்ளன. ஜப்பான், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கையொப்பமிட்டு நேற்று வெளியிட்டுள்ள இந்த அறிக்கையிலே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதில் மேலும்,

சமாதான நடவடிக்கைகள் பற்றியும் நோர்வே அரசின் அனுசரணை முயற்சிகள் தொடர்பாகவும் சிறிலங்கா அரசின் பங்காளிக் கட்சியான ஜே.வி.பி.யினர் தெரிவித்துவரும் கருத்துக்கள் குறித்து இவர்கள் தமது கடும் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளனர். இந்தக் கருத்துக்கள் சமாதான நடவடிக்கைகளை பாதிக்கும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சிறிலங்கா அரசின் சமாதான நடவடிக்கைகள் குறித்து ஜே.வி.பி.யினர் மேற்கொண்டுவரும் எதிர்பிரச்சார நடவடிக்கைகள், சமாதான நடவடிக்கைகள் தொடர்பாகவும் நோர்வேயின் அனுசரணைப்பணி தொடர்பாகவும் அரசாங்கத்தின் நிலைப்பாடு தொடர்பில் சந்தேகத்தை தோற்றுவிப்பதாக அமைந்துள்ளன என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில், நோர்வேயின் அனுசரணைப்பணி மற்றும் சமாதான முயற்சிகள் தொடர்பில் சிறிலங்கா அரசின் தீர்க்கமான நிலைப்பாட்டை சனாதிபதி உடனடியாக தெளிவுபடுத்த வேண்டிய அவசியம் பற்றியும் அந்த அறிக்கையில்

(11ஆம் பக்கம் பார்க்க)

### - சமாதான முன்னெடுப்புக்கள் குறித்து -

# தெற்கின் நிலை நம்பிக்கை தருவதாகஇல்லை

# நோர்வேயும் அதனை வெளிப்படுத்தவில்லை!

## எரிக்குடனான சந்திப்பின் பின் சு.ப.தமிழ்ச்செல்வன்

(கிளிநொச்சி)

**தெற்கில் இருந்து வருகின்ற சமாதானத்திற்கு விரோதமான செய்திகள், கருத்துக்கள் என்பனவற்றை வைத்துப் பார்க்கின்ற போது பேச்சுவார்த்தைகள் சமாதான முன்னெடுப்புக்கள் ஆக்கபூர்வமானதாக முன்னெடுக்கப்படும் எ[illegible]ற நம்பிக்கையை எமக்கு ஏற்படுத்தவில்லை. நோர்வே அனுசரணையாளர்களும் பெரிய நம்பிக்கையோடு தங்களுடைய நிலைப்பாட்டை தெரிவித்ததுபோல் எமக்குப் படவில்லை என அரசியல் துறைப் பொறுப்பாளர். சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்தார்.**

எரிக்சூல் ஹெய்முடனான சந்திப்பின் பின்னர் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு சு.ப தமிழ்ச்செல்வன் அவர்கள் அளித்த பதில்கள் வருமாறு;

*இன்றைய சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் என்ன?* இன்றைய சந்திப்பில் சமாதான முன்னெடுப்புக்களில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைகள் சம்பந்தமாக அதிகமான நேரம் விவாதித்தோம் குறிப்பாக எமது தேசியத்தலைவர் அவர்களின் மாவீரர்தின உரையில் தலைவருடைய நிலைப்பாடுகளை மீண்டும் நோர்வே அனுசரணையாளர்களுக்கு இன்று வலியுறுத்திக் கூறியிருக்கிறோம். அரசாங்கத்துக்கு இன்றைய நெருக்கடி நிலைபற்றியும் எமது தலைமைப்பீடத்தின் உறுதியானநிலைப்பாட்டையும் வலியுறுத்தி கூறியிருக்கிறோம்.

(12ஆம் பக்கம் பார்க்க)



## கைக்குண்டுவீச்சுச் சம்பவத்துடன் ஹெல உறுமய பிக்குகளுக்கு தொடர்பு

### -சனாதிபதி சந்திரிகா குற்றச் சாட்டு

(கொழும்பு)

கொழும்பில் இந்தி திரைப்பட நடிகர் ஷாருகான் கலந்து கொண்ட நிகழ்ச்சியில் கைக்குண்டு வீசப்பட்ட சம்பவத்துடன் ஜாதிக ஹெல உறுமயவைச் சேர்ந்த இரு பிக்குகளுக்கு தொடர்பு இருப்பதாக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறியுள்ளார். இதனையடுத்து அந்த இரு பிக்குகளின் பெயர்களையும்

(11ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை சமாதான முயற்சிகள் வெற்றியளிக்க வேதனை தரும் விட்டுக் கொடுப்புக்கள் அவசியம்

### அமெரிக்கத் தூதுவர் தெரிவிப்பு

இலங்கையில் சமாதான முயற்சிகள் வெற்றி அளிக்க வேண்டுமானால் வேதனைதரும் விட்டுக்கொடுப்புக்கள் அவசியம் என அமெரிக்கத் தூதுவர் ஜெப்பரி லான்ஸ்ரட் தெரிவித்துள்ளார்.

இலங்கை சர்வதேச உறவுகள் நிலையத்தின் ஏற்பாட்டில் அறிவு உளப்பாங்கு மற்றும் செயற்பாடுகள் தொடர்பான அளவிடுகையின் வெளியீட்டு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமெரிக்கத் தூதுவர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளும் பிரதிநிதிகள் மக்களின்

(11ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் லெப்.கேணல் மறவனிற்கு மக்கள் அஞ்சலி

### - பொட்டு அம்மான் மலர்வணக்கம் செலுத்தினார்.



(அலுவலக செய்தியாளர்)

லெப்.கேணல் மறவன் மாஸ்ரர் அவர்களின் வீர வணக்கக் கூட்டம் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நேற்று மாலை நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் பூவிழி தலைமையில் நடைபெற்ற இன் நிகழ்வில் பொதுச் சுடரினை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம் அவர்களும் அவரது பாரியார் திருமதி.பொன்.தியாகம் அவர்களும் ஏற்றிவைத்தனர்.

அதனைத் தொடர்ந்து மறவன் மாஸ்ரரின் உறவினரான செனநாயகம் அவர்கள் வித்துடலுக்கான

(11ஆம் பக்கம் பார்க்க)

## அவசியமான கருத்துப் பரிமாறல்களை அரசு, புலிகளுடன் நடத்துகிறேன்

### -கிளிநொச்சியில் எரிக்சூல்ஹெய்ம்

(கிளிநொச்சி)

சிறிலங்கா அரசாங்கத்துடனும் விடுதலைப் புலிகளுடனும் அவசியமான கருத்துப் பரிமாறல்களை நடத்தினேன் என நேற்றுக் கிளிநொச்சிக்கு வந்து விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்து கலந்துரையாடிய பின் நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சூல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் நாங்கள் விடுதலைப் புலிகளின்அரசியல்துறைப் பொறுப்

(11ஆம் பக்கம் பார்க்க)

## இணைப்பு




லெப். கேணல் மறவன் அவர்களின் திருவுருவப்படம் இன்றைய ஈழநாதம் நாளேட்டுடன் இணைக்கப்பட்டுள்ளது.

## வரிவிளம்பரம்

**வேழன்பதிப்பகம்**

உங்கள் சகல விதமான அச்சக வேலைகளையும் கணனி மூலம் வடிவமைத்து ஓவ்செற்றில் அச்சிட்டுப் பெற்றுக்கொள்ள வேழன் பதிப்பகம் கனகபுரம் வீதி, கிளிநொச்சி. (5284)

## கொடுப்பனவு

கியூடெக் நிறுவனத்தினரால் தொண்டர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகள் கீழ்குறித்த திகதியில் வழங்கப்படுமென தெரிவிக்கப்படுகிறது. இன்று கண்டாவளை, கரைதுறைப்பற்று பிரதேசத்திலும் நாளை பூநகரி பிரதேசத்திலும், 20-12-2004 ஆம் நாள் அக்கராயன், ஸ்கந்தபுரம் பிரதேசத்திலும் உரிய நேரத்தில் உரிய இடங்களில் வைத்து வழங்கப்படுமென கிளிநொச்சி கி[illegible]டெக் நிறுவன இயக்குனர் ஞா.பீற்றர் அடிகளார் தெரிவித்துள்ளார். (கு)

## எழுதுனர் பயிற்சி நெ[illegible]க்கான வேண்டுகை

பின்வரும் தகைமையுடைய ஆண்/பெண் இருபாலாரிடமும் எழுதுனர் பயிற்சி நெறிக்கான வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

**தகைமைகள்:-**

**01. கல்வித்தகைமை:-**

* க.பொ.த சாதாரணதரத்தில் தமிழ், கணித பாடங்கள் உட்பட 06 பாடங்களில் சித்தியடைந்தவராக இருத்தல் வேண்டும். அல்லது.
* க.பொ.த.சாதாரணதரத்தில் தமிழ்,க்ணித பாடங்களில் சித்தியடைந்தவராகவும், க.பொ.த.உயர்தரத்தில் சித்தியடைந்தவராகவும் இருத்தல்வேண்டும்.

**02. அகவை:-**

18 தொடக்கம் 25 வரை

**குறிப்பு:-**

01. விண்ணப்ப முடிவு நாள்:- 31.12.2004
02. விண்ணப்பதாரருக்கான நேர்முகத் தேர்வு நடைபெறும் நாள் 12.01.2005அன்று காலை 09.00மணிக்கு
03. நேர்முகத்தேர்வு நடைபெறும் இடம்:- போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவு, நடுவப்பணியகம் கிளிநொச்சி. (கிளி/மகாவித்தியாலயம் அருகாமை)
04. நேர்முகத்தேர்வுக்கு வருகை தருபவர் தங்கள் கல்வித்தகைமைச் சான்றிதழ், பிறப்புச்சான்றிதழ், வதிவிடச்சான்றிதழ், தேசிய அடையாள அட்டை, பிற தகைமைச் சான்றிதழ், குடும்பப்பதிவு அட்டை என்பவற்றுடன் வருகைதருதல் வேண்டும்.
05. பயிற்சிக்காலத்தில் தங்குமிட வசதி வழங்கப்படுவதுடன் உதவு தொகையாக மாதம் ஒன்றுக்கு 4000 ரூபா வீதம் வழங்கப்படும்.
06. இப்பயிற்சிக்காலம் 06 மாதகாலத்திற்கு வழங்கப்படும்
07. பயிற்சி முடிவின் பின்னர் அவர்களின் தகைமைக்கேற்ப பணியமர்த்தப்படும்.

**விண்ணப்பப்படிவத்தின் மாதிரி:-**

01. விண்ணப்பதாரியின் முழுப்பெயர் :-
02. பிறந்த/ஆண்டு/மாதம்/திகதி :-
03. தேசிய அடையாள அட்டை இல :-
04. விண்ணப்பதாரியின் முகவரி :-
05. க.பொ.த.சாதாரண தகைமைகள் :-
06. க.பொ.த.உயர்தர தகைமைகள் :-
07. பிறகல்வித்தகைமைகள் :-
08. குடும்பவிபரம் :-
09. பால் :-

*விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:-*

மேலாளர்,
திட்டமிடல் பகுதி,
நடுவப்பணியகம்,
போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவு,
கிளிநொச்சி.

(சி-10972)

## வரவு-செலவுத் திட்டம்-2005
## கரைதுறைப்பற்று பிரதேசசபை முல்லைத்தீவு

2005 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் பொது மக்கள் பார்வைக்காக தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளது. 16.12.2004 தொடக்கம் 23.12.2004 வரை அலுவலக நேரங்களில் பார்வையிடலாம் என அறியத்தருகிறேன்.

(இ.கிருஷ்ணபிள்ளை)
செயலாளர்,
கரைதுறைப்பற்று
பிரதேசசபை,
முல்லைத்தீவு.

(சி.10528)

## வேலை வாய்ப்பு ஏற்படுத்துவதற்கான விண்ணப்பம் கோரல்

மேற்படி விண்ணப்பம் மாவீரர், போராளிகள் குடும்பங்களை சேர்ந்தவர்களுக்கு வேலை வாய்ப்பினை ஏற்படுத்துவதற்காக கிளிநொச்சி ஜெயந்திநகர்ப் பகுதியில் அமைக்கப்பட்ட ஒளிர் வன்னி ஆடை உற்பத்தியகத்திற்கும், ஒளிர் வன்னி கட்டட உற்பத்தியகத்திற்கும் வேலை பெறுவதற்கானது:-

✡ வேலைகள்:-

I. *ஆடை உற்பத்தியகம்:-*

✡ தைப்பதற்கு
✡ அயன்செய்வதற்கு
✡ பக்கிங் செய்வதற்கு
✡ ஆடைகள் விற்பனை செய்வதற்கு
✡ திரை அச்சு செய்வதற்கு
✡ ஆடைகள் நாகரீகத்திற்கேற்ப திட்டமிடுவதற்கு
✡ கனரக தையல் இயந்திரங்கள் திருத்துவதற்கு, (யுக்கிமிசின்,கறாமிசின்)

II. *கட்டட உற்பத்தியகம்:-*

✡ பூச்சாடிகள் செய்வதற்கு,
✡ கிறீன் கற்கள் செய்வதற்கு,
✡ பெரிய தூண்கள் செய்வதற்கு,
✡ சிறிய தூண்கள் செய்வதற்கு,
✡ கொங்கிறீற் கற்கள் செய்வதற்கு,

குறிப்பு:- பெண்கள், ஆண்களும் விண்ணப்பிக்கலாம்.

✡ வேலை அனுபவங்கள் இல்லையெனில் பயிற்சி வழங்கப்படும்.
✡ விண்ணப்பங்களை நேரிலோ, தபால் மூலமாகவும் எமக்கு தெரியப்படுத்தலாம்.
✡ விண்ணப்ப முடிவுத் திகதி. 20.12.2004 இற்கு முன்பு
✡ விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:-

பெண்கள் வேலைத்திட்டப்பகுதி,
சமுதாய முன்னேற்ற நிலையம்,
தலைமைச் செயலகம், ஜெயந்திநகர்,
கிளிநொச்சி.


தகவல்:-

நிர்வாகம்
பெண்கள் வேலைத்திட்டப்பகுதி

(சி.11033)

## துயர் பகிர்கிறோம்

மண்ணில் 1978 — 03 — 22



மனங்களில் 2004 — 12 — 13

### அமரர் சாம்பசிவம் இரகுலதரன் (இரகு)


"மதியுயர்ந்து நீ நெடுங்கலாம்
வாழ்வாய் என்றிருக்க....
விதிவரைந்த பாதையில்
இளமலரே-உன்
உயிர் துறந்து போனது ஏன்?
கலகலவென்ற உன் புது வாழ்வு
கதிகலங்கிப் போனது மேன்?
துள்ளித்திரிந்த உன் கால்த்தடம்
அழியுமுன்னே....
சாவள்ளிப் போனதை எம்மால்
தாங்க முடியவில்லையே இரகுலதரனே....."

பணிப்பாளர்,பொறுப்பாளர்கள்,
போராளிகள்,பணியாளர்கள்
ஆயப்பகுதி நிதித்துறை.

(சி.10 973)

## வீரவணக்கம்

மண் மடியில் 06 12 1936



மனக் குழியில் 11 12 2004

கடற்புலிகளின் மூத்த உறுப்பினரும்
கடற்றொழிலாளர் கூ.சங்க சமாசங்களின் மேலாளருமான

### லெப்.கேணல் மறவன் மாஸ்ரர்

(எலியாஸ்பிள்ளை ஸ்ரனிஸ்லோஸ்-தாளையடி -(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கின் மீள்குடியேற்றத்துக்கு அடித்தளமாக பள்ளிகளை மீள இயங்க வைப்பதில் தமிழீழக் கல்விக்கழகத்துடன் இணைந்து செயலாற்றி இன்று 11 பள்ளிகளை மீள ஆரம்பித்து 2000 இக்கு மேற்பட்ட மாணவர்கள் கற்பதற்கு வழிவகுத்துத் தந்த எமது மறவன் மாஸ்ரருக்கு வீரவணக்கத்தைத் தெரிவிக்கின்றோம்.

தமிழீழக் கல்விக்கழகம்,
வடமராட்சி கிழக்கு.

(சி.11035)

# மலேசிய எண்ணெய்க் கப்பல் கடலில் மூழ்கியது மீட்க வந்த உலங்கு வானூர்தியும் கடலில் விழ்ந்தது

## -ஐந்து இந்தியர்கள்உட்பட 6 பேர்பலி

(வோஷிங்டன்)

**மலேசியா நாட்டுக்குச் சொந்தமான எண்ணெய்க் கப்பல் கடலில் உடைந்து மூழ்கியது. இதில் பணியாற்றிய 6 சிப்பந்திகள் நடுக்கடலில் தத்தளித்தனர். அவர்களை மீட்டுக்கொண்டு திரும்பும் போது உலங்கு வானூர்தி கடலில் விழுந்தது. இதில் 5 இந்தியர்கள் உட்பட 6 பேரும் தண்ணீரில் மூழ்கி இறந்தனர்.**

'செலண்டாங் ஆயூ' என்ற இந்தக்கப்பல் 738 அடி நீளம் கொண்டது. 5 இலட்சம் கலன் கச்சாய் எண்ணெய்யையும், சோயா பீன் எண்ணெய்யையும் ஏற்றிக் கொண்டு வந்தது. அமெரிக்காவில் உள்ள அலாஸ்கா அருகே இந்தக் கப்பல் பாறை மீது மோதி இரண்டாக உடைந்தது.

இந்தக் கப்பலில் பணியாற்றிய 6 சிப்பந்திகளும் நடுக்கடலில் உடைந்தகப்பலின்மத்தியில் தவித்தனர்.அவர்களை மீப்பதற்காக அமெரிக்க கடலோரகாவல் படையின்உலங்குவானூர்தி அனுப்பப்பட்டது.

6 பேரையும் ஏற்றிக்கொண்டு அந்த உலங்கு வானூர்தி திரும்பும் போது 'திடீர்' என்றுகடலில் விழுந்தது. இதில் 6 பேரும் தண்ணீரில் மூழ்கி இறந்தனர். இறந்தவர்களில் 5 பேர் இந்தியர்கள், 6ஆவது நபர் பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்தவர் இது பற்றிய தகவலை அமெரிக்க கடலோர காவல் படைத்தலைவர் அட்மிரல் தோமஸ்கொலின்ஸ் அமெரிக்காவுக்கான இந்தியத் தூதர்ரோனன் சென்னிடம் தெரிவித்தார். பலியான 5 பேரும் பஞ்சாப், அரியானா, மராட்டியம், கோவா ஆகிய மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள். தூதர் சென் இந்தத் தகவலை மத்திய வெளிநாட்டு இலாகாவிடம் தெரிவித்து விட்டார்.



ஒரு பலஸ்தீன யுவதி தனது சகோதரியை அழிவடைந்த பழைய வீட்டிலிருந்து அகதிமுகாம் ஒன்றிற்குக் காவிச்செல்கிறார்.

## ஈராக் தேர்தலுக்கான பிரச்சாரங்கள் ஆரம்பம்

எதிர்வரும் சனவரிமாதம் 30 ஆம் திகதி நடத்தப்படவுள்ள ஈராக்கிய தேர்தலுக்கான பிரச்சார நடவடிக்கைகளை ஈராக்கிய அரசியல் கட்சிகள் ஆரம்பித்துள்ளன.

275 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான தேர்தல் சனவரி மாதம் 30ஆம்திகதி நடத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. தேர்தலை தொடர்ந்து ஈராக்கிய அரசியல் அமைப்பு உருவாக்கப்படவுள்ளது. இதுவரை 70 அரசியல் கட்சிகள் தேர்தலில் போட்டியிடுவதற்கு வேட்பு மனுக்களை தாக்கல் செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தேர்தலை நடத்தக் கூடாது என்று எச்சரித்துள்ள ஷனி முஸ்லீம் பிரிவினரும் தேர்தலில் போட்டியிடுவதற்கு தயாராகி வருவதாக அறிவிக்கப்படுகின்றது.



கியுபா சனாதிபதி பீடல் கஸ்ரோவும் [வ] வெனிசுவெலா சனாதிபதியான குகோசவெஸ் [இ] ஆகியோர் கவானாவில் உடன்படிக்கை கைச்சாத்தானபின் ஒரு வரை ஒருவர் தழுவுகின்றனர்.

# தலிபான் இயக்க பாதுகாப்பு அதிகாரி ஆப்கான் இராணுவத்தால் கைது!

(காந்தகார்)

காந்தகார் தலிபான் தலைவர் முல்லா ஓமரின் தனிப் பாதுகாப்புப் படையின் தலைவரை ஆப்கான் பாதுகாப்புப் படையினர் காந்தகார் நகரில் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர். தலிபான்களின் பிடியில் சிக்கியிருந்த ஆப்கானை கடந்த 2001ஆம் ஆண்டு அமெரிக்கப் படைகள் விடுவித்தன. அங்கு பதுங்கியிருந்த தலிபான் தலைவர் முல்லா ஓமரும், அல்-குவைதா தலைவர் ஓசாமா பின்லேடனும், அங்கிருந்து தப்பியோடி விட்டனர். அவர்களை தேடும் பணிகள் தொடர்ந்து வருகிறது. தீவிரவாதிகள் விரட்டியடிக்கப்பட்ட பின்பு ஆப்கானிஸ்தானில் ஹமித் கர்சாய் தலைமையில் புதிய அரசு செயற்பட்டு வருகிறது. எனினும் ஆப்கானில் அமைதியை ஏற்படுத்தவும் தலிபான்கள் மீண்டும் ஆதிக்கம் பெற்று விடாமல் தடுக்கவும், அமெரிக்கா தலைமையிலான பன்நாட்டுப் படைகள் இங்கு நிறுத்தப்பட்டுள்ளன. இந்நிலையில் முல்லா ஓமரின் தனிப் பாதுகாப்புப் படையின் தலைவர் முல்லா நஹிபுல்லாகான் என்பரை அமெரிக்கப் பாதுகாப்புப் படை கைது செய்துள்ளது. காந்தகார் நகரை நோக்கி நஹிவுல்லா கான் வந்துகொண்டிருந்த போது ஆப்கான் படைகள் அந்த வானை வழிமறித்து கானை கைது செய்தனர். அவருடன் இருந்த தலிபான் தீவிரவாதியான முல்லா ஆங்கர் என்பவரும் கைதுசெய்யப்பட்டார். அவர்களிடமிருந்த மொபையில் போன்கள்மற்றும்சிலஆவணங்கள் கைப்பற்றப்பட்டன. இது குறித்து காந்தகார் மாகாணத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் கூறு கையில் "ஓமரின் வீட்டில் பாது காப்பு பொறுப்பை கவனித்து வந்த நஹிபுல்லாகான் கைதுசெய்யப்பட்டுள்ளார். இதன் மூலம் ஓமரை விரைவில் கைது செய்ய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. மேலும் பல தலிபான் தீவிரவாதிகள் விரைவில் பிடிபடுவார்கள்" என்றார்.

இதனிடையே ஓசாமாபில் லேடனை பிடிப்பதற்காக பாகிஸ்தானில் வடமேற்கு பகுதியில் அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏவின் தளம்அமைக்கப்பட்டுள்ளதாக வந்துள்ள செய்தியை பாகிஸ்தான் மறுத்துள்ளது. இதுகுறித்து பாகிஸ்தான் மூத்த அதிகாரியொருவர் கூறுகையில்.

# இருபது பேரைக் கொலை செய்த இளைஞனுக்கு மரண தண்டனை!

(சியோல்)

தென்கொரியாவின் பல்வேறு நகரங்களில் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு இளம்பெண்கள், விபச்சார அழகிகள் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டனர். 20 பேர் வரை கற்பழிக்கப்பட்டும், சித்திரவதை செய்யப்பட்டும் மர்மக் கொலையாளியால் பலியானார்கள்.

பொலிஸ் தீவிர வேட்டைக்குப் பிறகு இந்தக் கொலைகளைச் செய்த கொடூரன் 33 வயது யூயங்சுல் பிடிபட்டான். அவன் மீது ஓராண்டுக்கும் மேலாக நீதிமன்றில் விசாரணை நடந்தது. இந்த வழக்கில் இப்போது யூயங்சுல்லுக்கு மரணதண்டனை விதித்தது தென்கொரியா நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

# வடகொரியா மீதான பொருளாதாரத் தடை யுத்தப் பிரகடனமாகவே கொள்ளப்படும்

## -ஜப்பானை எச்சரிக்கிறது வடகொரியா

பொருளாதாரத் தடைகளை தம் மீதான யுத்தப் பிரகடனமாகவே கணிக்கப்படுமென்று வடகொரியா நேற்று ஜப்பானை எச்சரித்துள்ளது.

சர்ச்சைக்குரிய அனுவாயுத திட்டம் தொடர்பான ஆறு தரப்பு பேச்சுவார்த்தைகளிலிருந்து ஜப்பானை விலக்கிக் கொள்ள முயற்சி எடுக்கப்படும் என்று வடகொரியா மேலும் தெரிவித்துள்ளது.

வடகொரியாவினால் இனங்காணப்பட்ட எலும்புகள், கடத்தப்பட்டஜப்பானியரின் எலும்புகள் என இனங்காணப்பட்டதையடுத்து ஜப்பானிய மக்களும், அரசியல்வாதிகளும் வடகொரியா மீது பொருளாதாரத்தடைகள் கொண்டு வரப்படவேண்டுமென்று அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்துள்ளனர்.

வடகொரியா எலும்புகளை கடந்த நவம்பர் மாதம் நடத்திய பேச்சுவார்த்தைகளின்போது ஜப்பானிடம் கையளித்தது.

வடகொரியா தான் கடத்தியதாக ஒப்புக்கொண்ட 13 ஜப்பானியர்களில் ஒருவரின் எலும்புக் கூடே இதுவாகும். ஏனையோர் பற்றி விளக்கம் அளிக்குமாறு ஜப்பான் கேட்டுள்ளது.

## சுவிஸ் மக்களின் நேரம் தவறாமை

சுவிட்சர்லாந்தில் உள்ளவர்கள் நேரம் தவறாமைக்கு பெயர் போனவர்கள். எந்த விடயம் ஆனாலும் சரி வேலை ஆனாலும் சரி சரியான நேரத்தில் செய்தாக வேண்டும்.

தாமதம் அவர்களுக்குப் பிடிக்காத ஒன்று அதுவும் குறிப்பாக ரயில்கள் ஒரு வினாடி கூட நேரம் தவறுவது இல்லை. ரயில்கள் புறப்படும் நேரத்தையும் வந்து சேரும் நேரத்தையும். பார்த்து தங்கள் கடிகாரங்களை திருப்பிக் கொள்வதும் உண்டு.

கடந்த 22 ஆண்டுகளுக்குப் பிறகு சுவிட்சர்லாந்தில் ரயில்களின் நேரங்களை சற்று மாற்றி அமைத்து இருக்கிறார்கள். இது அங்குள்ள மக்களுக்கு சற்று குழப்பத்தை ஏற்படுத்தி இருக்கிறது.



மாவத்அல் அகா என்ற பலஸ்தீன போராளியின் மரணச்சடங்கில் பலஸ்தீனப் போராளிகள் அணிவகுக்கின்றனர்.

# அமெரிக்கப் படையினரின் உணவு வாகனங்களுக்கு பாக்தாத்தில் தீவிரவாதிகள் 'தீ' வைப்பு

## -படையினர் உணவுக்கு நெருக்கடி!

(பாக்தாத்)

ஈராக்கில் முகாமிட்டுள்ள அமெரிக்க இராணுவத்தினர் தினம் தினம் தீவிரவாதிகளின் தாக்குதலை சமாளித்து வருகிறார்கள். கடந்த ஒரு ஆண்டு காலமாக 1100 இற்கு மேற்பட்ட அமெரிக்க இராணுவத்தினர் பலியாகிவிட்டனர்.

உயிரை கையில் பிடித்துக் கொண்டிருக்கும் அமெரிக்கப் படையினருக்கு இப்போது புதிய சிக்கல் எழும்பியுள்ளது. அமெரிக்க வீரர்களுக்கு உணவு ஏற்றிச் சென்ற பாரவூர்திகளைத் தீவிரவாதிகள் குறி வைத்து தாக்குகிறார்கள். பாக்தாத்தில் நேற்று மட்டும் உணவு ஏற்றிச் சென்ற 10 பாரவூர்திகளுக்குத் தீவிரவாதிகள் தீவைத்து விட்டனர்.

உணவுப் பொருட்களுடன் வந்த பாரவூர்திகள் எரிந்து சாம்பலாகி விட்டது.தீவிரவாதிகளின் இந்தப் புதிய தாக்குதலால் அமெரிக்க வீரர்கள் பட்டினி கிடக்கும் சூழ்நிலை உருவாகியுள்ளது.



பாக்தாத்தில் அரச பாதுகாப்புப் பகுதி நுழைவாயிலில் ஏற்பட்ட கார்க்குண்டு வெடிப்பின் பின் எஞ்சிய பகுதிகளை அமெரிக்க இராணுவ வெடிபொருட் பகுப்பாய்வினர் ஆய்வு செய்கின்றனர்.

# வெள்ளத்தால் இடம்பெயர்ந்த மக்களுக்கு சரியான முறையில் உதவிகள் வழங்கப்படவில்லை

## -பொதுக்கட்டடங்களில் தங்கியுள்ள மக்கள் கவலை







(அலுவலக செய்தியாளர்)

பெருமழை காரணமாக ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான உதவிகள் சரியான முறையில் வழங்கப்படவில்லை என இடம்பெயர்ந்து பொதுக் கட்டடங்களில் தங்கியுள்ள மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த சில நாட்களாக பெய்துவரும் மழையால் தாழ் நிலப்பகுதிகளில் உள்ள குடியிருப்புக்களில் வெள்ள நீர் புகுந்துள்ள நிலையில் பெருமளவான மக்கள் பொதுக் கட்டடங்களில் தஞ்சம் புகுந்துள்ளனர். இவர்களுக்கான நிவாரண உதவிகள் எவையும் உரிய நேரத்தில் கிடைக்கக் கூடிய வழிவகைகளை எவரும் மேற்கொள்ளவில்லை. சில இடங்களில் காலை உணவு வழங்கப்படவில்லை. மக்களின் பாவனைப் பொருட்கள் வெள்ளத்தால் அடித்துச்செல்லப்பட்ட நிலையில் அவர்கள் உடமைகள் எதுவும் இன்றிய நிலையிலேயே தஞ்சம் புகுந்துள்ளனர். இந்நிலையில் அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் நிவாரண உதவிகள் எவையும் இதுவரை வழங்கப்படவில்லை.

குழந்தைகள், கர்ப்பிணிப்பெண்கள், வயோதிபர்கள் ஆகியோர் பாய், குளிர் அங்கிகள், நுளம்புவலை கள் எவையும் இல்லாது அல்லல் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவர்களின் உடனடித்தேவைகளைக் கூட பூர்த்தி செய்வதற்கு அரச, அரசசார்பற்ற பொது நிறுவனங்கள் இதுவரை முன் வரவில்லை. இதனால் இடம் பெயர்ந்து வாழ்கின்ற மக்கள் கவலை அடைந்துள்ளனர். வன்னிப் பகுதியெங்கும் பெய்து வரும் பெருமழை காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்துள்ளது. இதனால் மக்கள் பெரும் துயரமடைந்துள்ளனர்.

கடந்த சில நாட்களாக தொடர்ச்சியாகப் பெய்துவரும் பெரும்மழைகாரணமாக கிளிநொச்சி மாவட்டத்தின் தாழ் நிலப்பகுதிகள் அனைத்தும் வெள்ளம் புகுந்துள்ளது. இதனால் பல கிராமங்களில் மக்களின் வீடுகள் இடிந்து வீழ்ந்துள்ளது. இதனால் அப்பகுதி மக்கள்பொதுக் கட்டடங்களிலும், உறவினர் வீடுகளிலும் தஞ்சம் புகுந்துள்ளனர். வெள்ளம் சூழ்ந்துள்ள குடியிருப்புக்களில் உள்ள மக்களின் கால்நடைகள், கோழிகள், செல்லப்பிராணிகள், வீட்டு உபகரணங்கள் என்பன வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டிருப்பதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

பரந்தன் பகுதி நேற்று இரவு ஏற்பட்ட வெள்ளத்தினால் முற்றாக மூழ்கியது. எனினும் இரவு வேளைகளில் வெளியேற முடியாத காரணத்தால் மக்கள் வெள்ளத்தில் இருந்து நேற்றுக்காலையே வெளியேறினர்.

திருமுறிகண்டிப் பகுதியில் 75 குடும்பங்கள் இடம் பெயர்ந்து திருமுறிகண்டிப் பாடசாலையில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

உருத்திரபுரம் கிராமத்தில் 50 குடும்பங்களும், சாந்தபுரம் கிராமத்தில் 57 குடும்பங்களும் இடம் பெயர்ந்து உறவினர்கள் வீடுகளிலும், அயல்வீடுகளிலும் தங்கியுள்ளனர். பாரதிபுரம் அதை அண்டிய பகுதிகளிலும் 150 குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளன., தாரணி குடியிருப்பு வீட்டுச்சுவர்கள் இடிந்து விழுந்து மக்கள் இடம் பெயரும் நிலையில் உள்ளனர். பன்னங்கண்டி கிராமத்தில் 35 குடும்பங்கள் இடம் பெயர்ந்து பாடசாலைகளில் தங்கியுள்ளனர். திருவையாறு கிராமத்தில் 25 குடும்பங்கள் இடம் பெயர்ந்து திருவையாறு பாடசாலையில் தங்கியுள்ளன. சிவநகர் கிராமத்தில் வீட்டுச்சுவர்கள் இடிந்து விழுந்து 15 குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளன. சிவன் கோவில் கிராமம் வெள்ளத்தால் முற்றாக முழ்கடிக்கப்பட்டு 48 குடும்பங்கள் அப்பகுதியை விட்டு வெளியேற முடியாமல் நிர்க்கதியான நிலையில் உள்ளனர், அக்கராயன் மகாவித்தியாலயத்தில் 67 குடும்பங்களும், அக்கராயன் கரிதாஸ் குடியிருப்பில் 48 குடும்பங்களும் இடம் பெயர்ந்து, பிள்ளையார் கோவிலில் தஞ்சமடைந்துள்ளன. வன்னேரிக்குளம் மகாவித்தியாலயத்தில் 30 குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளன.

கண்ணகி கிராம பாடசாலையில் 35 குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளன.இதைத் தவிர கனகபுரம், யூனியன்குளம், கோணாவில் ஐயனார்குளம், மணியம்குளம், ஸ்கந்தபுரம் ,2ஆம் வாய்க்கால் பகுதி, முட்கொம்பன் 150 வீட்டுத்திட்டம் போன்ற பகுதிகள் தொடர்ந்து மழை தொடருமாக இருந்தால் இடம் பெயரும் அபாயம் உள்ளது.

அக்கராயன் பகுதிகளிலும் தொடர்ந்து மழை தொடருமாக இருந்தால் 400 குடும்பங்கள் இடம் பெயரும் நிலை உருவாகும் என தெரிவிக்கப்படுகிறது.

பரந்தன் பகுதியில் 250 இற்கும் அதிகமான வீடுகளில் வெள்ளம் புகுந்துள்ளது. வீடுகள் இடிந்து விழுந்துள்ளன. இத்தாவில் கிராம மக்கள் இடம் பெயர்ந்து இத்தாவில் கோவிலில் தஞ்சமடைந்துள்ளனர்.

பளை, புலோப்பளை பகுதிகள் பாரிய அழிவுகளைச் சந்தித்துள்ளது. பளை பகுதிகளில் அடை மழை தொடருமாக இருந்தால் 3500 குடும்பங்கள் இடம் பெயரும் நிலை உள்ளது.

மழை வெள்ளத்தினால் 2427 குடும்பங்கள் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் பாதிக்கப்பட்டுள்ளதாக ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் செல்வி. க.சுபாஜினி தெரிவித்தார்.

முற்று முழுதாக வீடுகள் இடிந்து பாதிக்கப்பட்ட கிராமங்கள் வித்தியாபுரம், கூழாமுறிப்பு, பெரிய இத்திமடு, ஒட்டுசுட்டான், முத்துவிநாயகர்புரம், இந்துபுரம், பனிக்கன் குளம், புளியங்குளம் ஆகிய கிராமத்தில் இருந்து சுமார் 1200 குடும்பங்கள் வீட்டை விட்டு வெளியேறியுள்ளன. இவர்களுடைய வீட்டுச் சுவர்கள் முற்றுமுழுதாக விழுந்துள்ளன. இவற்றுடன் மழை வெள்ள அனர்ந்தத்தினால் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் 2561 ஏக்கர் நெற்செய்கையும், 831 ஏக்கர் உப உணவுப் பயிர்ச்செய்கையும் முற்று முழுதாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவித்தார். (லோ,தீ,20,சோ)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் வழங்க பா.உறுப்பினர் அரியம் கோரிக்கை

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிப்புற்ற மக்களுக்கு உடனடி நிவாரண உதவிகளை வழங்குமாறு அரச ஊழியர்களுக்கு ஆறுமாத சம்பள முற்பணம் வழங்குமாறும் மட்டக்களப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் அரியநேந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக சமூக நலன் புரி அமைச்சர் சுமேதா ஜயசேனவுக்கு அனுப்பிவைத்துள்ள அவசர கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; மட்டக்களப்பு மாவட்டத்தில் பெய்துவரும் கடும் மழை மற்றும் பெரு வெள்ளம் காரணமாக மாவட்டத்தில் உள்ள 4 பிரதேச செயலாளர் பிரிவுகளும் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக வெல்லாவெளி, பட்டிப்பளை, வவுணதீவு, செங்கலடி, கிரான், வாகரை, களுவாஞ்சிக்குடி பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள சில கிராம மக்கள் இடம் பெயர்ந்து பொது இடங்களிலும், நண்பர்கள் உறவினர்கள் வீடுகளிலும் தஞ்சமடைந்துள்ளனர். தற்போது இடம் பெற்றுவரும் க.பொ.த (சா/த) பரீட்சை காரணமாக பல பாடசாலைகள் பரீட்சை நிலையங்களாகச் செயற்படுவதனால் தங்குவதற்கு இடமின்றி பல மக்கள் பலத்த சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர். மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள நாவற்குடா, மஞ்சந்தொடுவாய், இருதயபுரம், சத்துருக் கொண்டான் போன்ற தாழ் நிலப் பிரதேசங்களில் வசிக்கும் மக்களும் இடம்பெயரக் கூடிய நிலையில் உள்ளனர். மட்டக்களப்பு பொலனறுவை வீதியில் பல இடங்களில் வெள்ளம் பரவுவதால் வாகனங்கள் செல்ல முடியாதுள்ளது. இதேபோல் களுவாஞ்சிகுடி மண்டூர் வீதி, வவுணதீவுப்பாலம், கொக்கட்டிச்சோலை, மாவடிமுன்மாரி வீதி, அம்பிளாந்துறை, தாந்தாமலை வீதி என்பனவும் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் உள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரும்போக நெற்செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் தற்போது குடலைப் பருவத்தில் இவ்வாறான பெரு வெள்ளம் ஏற்பட்ட காரணமாக இம்முறை விளைச்சல் மிக மோசமாகப் பாதிக்கப்படும் என்றும் அஞ்சுகின்றனர். மீனவர்களும் தங்கள் தொழிலை இழந்துள்ளனர். அன்றாடக் கூலித் தொழில் செய்பவர்களும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



தொடர் மழைகாரணமாக பரந்தன் முல்லை. வீதியில் அமைந்துள்ள பாலங்களினால் பேருந்துகள் தொடர்ந்து போக்குவரத்து செய்ய முடியாத நிலையில் சுமார் 1 மைல் தூரம் நடந்து சென்று பேருந்து தரிப்பிடத்தை அடையும் மக்களை படத்தில் காணலாம்.

# தலைமன்னாரில் கடற்புலிகளால் கைப்பற்றப்பட்ட கஞ்சா மக்கள் முன்னிலையில் தீயிட்டு எரிப்பு

(மன்னார்)

கடந்த 11 ஆம் திகதி பேசாலை கடற்புலிகளின் அரசியல் துறையினரால் 31 /2 கிலோ கஞ்சா தலை மன்னார் பகுதியில்வைத்துக் கைப்பற்றப்பட்டது.

கடற்புலிகளின் அரசியல் துறையைச் சேர்ந்த அன்புராஜ், நிலவன், தென்றல் மாறன் ஆகியோரே கைப்பற்றியுள்ளனர். அதன் பின்னர் கைப்பற்றப்பட்ட பொருளை பேசாலையின் முக்கிய சந்தியில் வைத்து 500 பொதுமக்கள் மத்தியிலும் பேசாலைப் பங்குத் தந்தை அருட் திரு.வின்சன்பற்றிக் அவர்கள் முன்நிலையிலும் இதன் பாதிப்புக்கள் குறித்து மக்களுக்கு விளக்கி 3 1/2 கிலோ கஞ்சாவையும் சந்தியில் வைத்து தீயிட்டு எரித்துள்ளனர். (18)



வட்டக்கச்சியில் ஒளிவிழா

# யுத்தத்தை ஆரம்பிக்கத்திட்டமிட்டுள்ள அரசின் நடவடிக்கையைக் கண்டித்து வெகுசனப் போராட்டம்

## -தென்மராட்சி பொது அமைப்புக்களின் தீர்மானம்-

(தென்மராட்சி)

**சமாதான முயற்சிகளுக்கு எதிராக மீண்டும் பாரிய யுத்தம் ஒன்றை நடத்த திட்டமிட்டு வருகின்ற சிறிலங்கா அரசின் நடவடிக்கைகளைக் கண்டித்து தென்மராட்சியில் பொதுஅமைப்புக்களினால் முதல் கட்டமாக மூன்று இடங்களில் கண்டனப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.**

சிறிலங்கா அரசினுடைய சமாதான விரோத நடவடிக்கைகளைக் கண்டித்தும் மீண்டும் தமிழர்கள் மீது வலிந்து யுத்தம் ஒன்றை திணிப்பதற்கு திட்டமிட்டு வருகின்ற சனாதிபதி சந்திரிகாவின் போர் வெறியைக் கண்டித்தும் கடந்த மூன்றாண்டுகள் நிறைவடையவுள்ள இச்சமாதான ஒப்பந்தத்தில் சொல்லப்பட்ட எந்தவொரு தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளையும் தீர்வு காணப்படாமல் துயரம் நிறைந்த வாழ்க்கை நடத்திவரும் மக்களின் பிரச்சினைகளை இராணுவ நெருக்குவாரங்கள் மூலம் அடக்கிவிட முயன்று வருகின்ற செயற்பாடுகளைக் கண்டித்தும் திட்டமிட்டு நடத்தப்பட்டு வருகின்ற மனித படுகொலைகளை அரசைக் கைவிடக் கோரியம் கடந்த காலங்களில் பொதுமக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்காமல் இச்சமாதான காலத்தில் வடக்கிலும், கிழக்கிலும் துப்பாக்கிகளின் மூலம் தீர்வு காணத்துடிக்கும் அரசின் நடவடிக்கைகளைக் கண்டித்தும் சமாதானத்தை திட்டமிட்ட ரீதியில் குழப்பி குளிர்காயத்துடிக்கும் தமிழினத்தின் விரோதிகளுக்கு கவசமாக செயற்படும் அரச இயந்திரங்களைக் கண்டித்தும் மற்றும் மேற்கத்திய நாடுகளுடனும் அயல் நாடுகளுடனும். செய்து கொள்ள முற்படும் இராணுவ ரீதியிலான ஒப்பந்தங்களும் பெருந்தொகையான ஆயுத கொள்வனவுகளும், படைக்குவிப்புக்களும் மற்றும் பாராளுமன்றத்தில் பாதுகாப்புத் துறைக்கென இலங்கை அரசினால் ஒதுக்கப்பட்டுள்ள பல கோடி மில்லியன் நிதி போன்ற அரசின் சமாதானத்திற்கு விரோதமான திட்டமிட்ட நடவடிக்கைகளைக் கண்டித்தும் போரா-சமாதானமா இந்த நாட்டுக்கு தேவை என்பதை சிங்கள தேசமும் முடிவு செய்யக் கோரி சிறிலங்கா அரசை வற்புறுத்தியே மிகப் பரந்த அளவில் மக்கள் போராட்டத்தை முன்னெடுக்க தென்மராட்சிபொது அம்மைப்புக்கள் முடிவு செய்துள்ளன. இதற்கென அவசர விசேட கூட்டம் ஒன்று நேற்று முன்தினம் இடம் பெற்றது. தென்மராட்சி தேசிய எழுச்சிப் பேரவையின் கோட்டச் செயலகத்தில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் பல முக்கிய முடிவுகளை பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எடுத்துள்ளதாகவும் அதன்படி முதற்கட்டமாக வரும் திங்கட்கிழமை சாவகச்சேரியிலும், செவ்வாய்க்கிழமை கைதடியிலும், புதன்கிழமை கொடிகாமத்திலும் கண்டனப் போராட்டம் ஒன்றை முன்னெடுக்க உள்ளதாக தென்மராட்சி பொது அமைப்புக்களின் சார்பில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (28)

## பாலம் சேதம்

யாழ்ப்பாணம்பருத்தித்துறை வீதியில் கட்டைப்பிராயை அண்மித்துள்ள 3ஆம் கட்டைப் பாலம் சேதமடைந்த நிலையில் காணப்படுவதால் பயணிகள் பேருந்துகள் மற்றும் பாரஊர்திகள் இப் பாலத்தைக்கடக்கும் போது பாலம் இடிந்து விபத்துக்கள் ஏற்படக்கூடிய அபாயம் தோன்றியுள்ளது. (33)

## சாருக்கான் குழுவினரை மீண்டும் அழைக்க வேண்டுமென்கிறது ஜே.வி.பி

சாருக்கானை மீண்டும் இலங்கைக்கு அழைத்து உபசரித்து குண்டு வெடிப்பினால் இலங்கையின் நற்பெயருக்கு ஏற்பட்டுள்ள களங்கத்தை அழிக்கவேண்டும் என்று ஜே.வி.பி. அறிவித்துள்ளது.

அந்தக்கட்சி விடுத்துள்ள அறிக்கையில், அரசியலில் தோற்கடிக்கப்பட்ட சில கட்சிகளின் பின்னணியுடனேயே இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. "சாருக்கான் பி.பி.ஸிக்கு அளித்த பேட்டி யொன்றில் இலங்கையில் நடைபெற்ற சம்பவம் எதிர்பார்க்க முடியாத நிகழ்வு என்றும், இனிமேல் இலங்கையின் பக்கம் தலைவைத்தும் படுக்கமாட்டேன் என்றும் தெரிவித்துள்ளார். ஆகவே சாருக்கான் உட்பட ஏனைய திரை நட்சத்திரங்களை நல்லதொரு சூழ்நிலையில் மீண்டும் இலங்கைக்கு அழைத்து இலங்கையர்கள் தீவிரவாதிகளோ மதவாதிகளோ அல்ல என்பதை அவர்களுக்கு வெளிப்படுத்தவேண்டும். கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற சம்பவத்துடன் தொடர்புடையவர் களைத் தண்டிக்க வேண்டும்.'' என்று ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

## மழை வெள்ளத்தால் மூன்று பாலங்கள் சேதம் பருத்தித்துறை–கொடிகாமம் போக்குவரத்து பாதிப்பு

(தென்மராட்சி)

மழை வெள்ளத்தால் பாலங்கள் சேதமாகி உள்ளதால் பருத்தித்துறை- கொடிகாமம் ஊடான போக்குவரத்துப்பாதை பயன்படுத்த முடியாத நிலை தோன்றியுள்ளது.

பருத்தித்துறை -கொடிகாமம் ஊடான போக்குவரத்துப்பாதை மூன்று இடங்களில் பாலம் உடைப்பெடுத்து வெள்ளம் பாய்வதால் வாகனங்கள் போக்குவரத்தை மேற்கொள்ள முடியாத நிலை தோன்றி இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இச்சாலை ஊடான குடவத்தைப்பாலம் முற்றாக உடைந்து வாகனப் போக்குவரத்து செய்யமுடியாத நிலையில் முள்ளிப்பாலம் மற்றும் களியச்சந்திப் பாலம் கடும் சேதம் உற்ற நிலையில் பருத்தித்துறையில் இருந்து கொடிகாமம் வரும் சிற்றூர்திகள் நெல்லியடியில் இருந்து குடவத்தை சந்தி ஊடாக கொடிகாமம் வருவதாகவும், அரசாங்க பேருந்துகள் கலிகச்சந்தியூடாக மந்திகை வந்து வல்லிபுரக்கோயில் சந்தியூடாக கொடிகாமம் வருவதாக தெரிவிக்கப்படுகிறது. தொடர்ந்து மழைபெய்யுமெனில் இச்சாலையூடான போக்குவரத்து கடுமையாகப் பாதிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (28)

## காக்கை தீவு கடற்பரப்பில் கடற்படை ரோந்து கடற்றொழிலாளர் தொழிலிலீடுபட அச்சம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.காக்கைதீவு கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினர் தமது ரோந்து நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளதால் கடற்றொழிலாளர்கள் தம்தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அச்சம் தெரிவித்துள்ளனர். கடந்த சில தினங்களாக வழமைக்கு மாறான விதத்தில் நீருந்து விசைப்படகுகள் மூலமான கடற்பரப்பு ரோந்து நடவடிக்கைகளை அதிகரித்துள்ள படையினர் கடற்றொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் படகுகளை வழிமறித்து அவற்றில் இருக்கும் கடற்றொழிலாளர்களது பாஸ், அடையாள அட்டைகள் என்பவற்றை சோதனை செய்வதுடன் கடற்றொழிலாளர்களது படகுகளுள்ளும் இறங்கி சோதனை நடத்துவதாக கடற்றொழிலாளர் தெரிவித்துள்ளனர். இது தமது இயல்பான தொழில்நடவடிக்கைகளைப் பாதிப்பதாகவும் சுட்டிக் காட்டியுள்ளனர். (33)

## வாகனத்தை நடுவீதியில் விட்டுச் சென்ற படைச்சாரதிக்கு மக்கள் தர்ம அடி

(தென்மராட்சி)

சாவகச்சேரி கச்சாய் வீதியில் பொது மக்களின் போக்குவரத்திற்கு இடையூறு விளைவிக்கும் விதமாய் நடுவீதியில் படை வாகனத்தை விட்டுச்சென்ற படை வாகனச் சாரதிக்கு பொதுமக்கள் தர்ம அடி கொடுத்தனர். பின்னர் பொது மக்களிடம் மன்னிப்புக் கோரியசாரதி வாகனத்தை மீட்டுச் சென்றார்.(28)

## கொடிகாமம் மிருசுவில் பகுதியில் மீண்டும் திருட்டுக்கள் அதிகரிப்பு

(தென்மராட்சி)

கொடிகாமம் மற்றும் மிருசுவில் பிரதேசங்களில் மீண்டும் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பல இடங்களில் வீடுகளுக்கு திருடச் சென்றவர்களை மக்கள் விரட்டியடித்துள்ளதாகவும், சில இடங்களில் திருடர்கள் தங்களது கைவரிசையைக் காட்டிச் சென்றுள்ளதாகவும், இதனால் இப்பிரதேசங்களில் விழிப்புக் குழுக்களை அமைக்க இப்பிரதேச மக்கள் முடிவு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (28)

## நாவலடிப்பகுதியில் வீடுகள் வெள்ளத்தில் மக்கள் பாடசாலைகளில் தஞ்சம்

கொடிகாமம் நாவலடிப் பகுதியில் பதினைந்துக்கும் மேற்பட்ட வீடுகள் வெள்ளத்தில் மூழ்கி உள்ளதால் மக்கள் இப்பகுதியில் உள்ள பாடசாலைகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். தொடர்ந்து பெய்துவரும் மழையால் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ள நிலையில் மக்கள் இருந்து வருவதாகவும் இதுவரை பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவுகளோ, சமைத்த உணவுகளோ எந்த ஒரு தனியார் மற்றும் அரச அமைப் புக்களால் வழங்கப்படவில்லை என்று தெரியவருகிறன்து. (28)

## அனைத்துப் பல்கலை. மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் இன்று சனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்துப்பேச்சு!

(யாழ்ப்பாணம்)

அனைத்து பல்கலைக்கழகங்களையும் சேர்ந்த மாணவ ஒன்றியப் பிரதிநிதிகள் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை இன்று மதியம் ஒரு மணியளவில் சனாதிபதி மாளிகையில் சந்திக்கவுள்ளனர்.

இச்சந்திப்பில் கிழக்கு பல்கலைக்கழகம் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவ ஒன்றியப் பிரதிநிதிகள கலந்து கொள்ளவுள்ளனர். இச்சந்திப்பின்போது தமிழ் மக்களது நிலைப்பாடுகள் தொடர்பாகவும் விரைவில் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பது தொடர்பாகவும் மாணவ ஒன்றியப் பிரதிநிதிகள் அழுத்தங்களைப் பிரயோகிப்பர் என எதிர்பார்க்கப்படுகின்றது. இச்சந்திப்பில் கலந்துகொள்ளும் யாழ்ப்பண பல்கலைக்கழக மாணவ ஒன்றியப் பிரதிநிதிகள் கொழும்பு சென்றுள்ளனர்.

## உரும்பிராய், இருபாலையில் கசிப்பு உற்பத்தியும் கலாசார சீரழிவு நடவடிக்கைகளும் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.உரும்பிராய், இருபாலை போன்ற பகுதிகளில் கசிப்பு உற்பத்தி நடவடிக்கைகள் அதிகரித்திருப்பதால் இவ்விடங்களில் கலாசார சீரழிவுகளும் அதிகரித்து வருவதாக அப்பகுதிகளைச் சேர்ந்த பொது அமைப்புக்கள் குற்றம் சாட்டியுள்ளன.

இது தொடர்பாக பொலிசாரிடம் முறையிட்டதைத் தொடர்ந்து பொலிசார் கசிப்பு உற்பத்தியை கட்டுப்படுத்துவதற்கு ஒருசில நடவடிக்கைகளை எடுத்துள்ள போதும் அவை ஆக்கபூர்வமாக அமையாததனால் இப்பகுதிகளில் தொடர்ந்தும் கசிப்பு உற்பத்தி நடவடிக்கைகள் இடம் பெற்றுவருவதாக குற்றம் சாட்டியுள்ள அப்பகுதி பொது அமைப்புகள் இரவு நேரங்களில் கசிப்பு அருந்திவிட்டு வீதிகளில் அலைந்து திரியும் கும்பல்கள் வழிப்பறி, கொள்ளை, பொது மக்களை வம்புக்கிழுத்து தாக்குதல் போன்ற செயல்களில் ஈடுபடுவதுடன் கலாசார சீரழிவு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.(33)

## தென்மராட்சியில் வாள்களுடன் ரோந்துசுற்றும் இராணுவ புலனாய்வாளர்

### -மக்கள் மத்தியில் அச்சம்

தென்மராட்சிப் பிரதேசத்தில் இரவு வேளைகளில் வாள்களுடன் திரியும் சிறிலங்கா இராணுவப் புலனாய்வுத்துறையினர் குறித்து பொது மக்கள் அச்சமடைந்துள்ளனர். தென்மராட்சிப் பிரதேசத்தில் இரவு வேளைகளில் சிங்கள புலனாய்வுத்துறையினர் கூர்மையான வாள்களுடன் [illegible]ருளிகளில் ரோந்து சுற்றி வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இச்செய்தி மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தை தோற்றுவித்துள்ளதுடன், கோபத்தையும் உண்டாக்கி இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நூணாவிலில் சில வாரங்களுக்கு முன்னால் இடம் பெற்றதாக தெரிவிக்கப்படும் வாள்வெட்டு சம்பவத்திற்கு பின்னாலேயே இவர்களுடைய நடமாட்டங்கள் அதிகரித்து இருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. சிங்கள புலனாய்வுத்துறையினுடைய இத்தகைய செயற்பாடுகள் பொது மக்கள் மத்தியில் ஆத்திரத்தை தோற்றுவித்து இருப்பதுடன், இவர்களது நடமாட்டத்தை முகாம்களுக்குள் முடக்கவும் நடவடிக்கை எடுப்பதென பொதுமக்கள் தீர்மானித்து இருப்பதாக தெரியவருகிறது. (28)

# சிறிலங்காவில் தொடரும் நீதிமன்ற அவமதிப்பு நிகழ்வுகள்

ஐ.தே.கட்சி பாராளுமன்ற உறுப்பினரான எஸ்.பி.திஸாநாயக்கவுக்கு உயர் நீதிமன்றம் அளித்துள்ள சிறைத்தண்டனை தீர்ப்பே இப்போது ஊடகங்களிலும் மக்களினதும் கவனத்தை ஈர்த்துள்ளது. அவர் நீதிமன்றத்தை அவமதித்தார் என்பதே குற்றமாகத் தெரிவிக்கப்பட்டது.

சிறிலங்காவில் நீதிமன்றங்கள் பல தரங்களாக பிரிக்கப்பட்டுள்ளன. அவற்றில் அதி உயர் நீதி நிறுவனமாக உயர்நீதி மன்றம் விளங்குகிறது. அதன் தீர்ப்பே இறுதி முடிவு என்பதையும் நாம் அறியாமல் இல்லை. அதனை ஆட்சேபிக்கும் வழிமுறைகளில் ஒன்றாக மேன்முறையீட்டு நீதிமன்றம் காணப்படுகிறது. ஆயினும் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தொடர முடியாதவாறு உயர்நீதி மன்றின் தீர்ப்பில் இறுதி முடிவு என அறிவிக்கப்பட்டுள்ளது.



எனினும் இதன் மறுபக்கத்தையும் சிந்திக்காமல் இருக்கமுடியாது. அதாவது திஸாநாயக்க குற்றவாளியென தீர்ப்பளிக்கப்படும் வேளையிலும் அவர் ஒரு பாராளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றி வந்தார். ஆகவே இந்தப் பாதிப்பு தொடர்பாக சட்ட ஒழுங்குகளையும் அரசியலமைப்பு முறையையும் ஆராயாமல் இருக்க முடியாது. அரசியலமைப்பின் 89 (C) பிரிவுக்கேற்ப இரண்டு வருடத்துக்குக்குறையாத சிறைத்தண்டனை பெற்ற ஒருவர் சிறைத் தண்டனை அனுபவிப்பாராயின், அல்லது மரணதண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டிருப்பின், அல்லது 7 வருடமாக சிறைவாசம் அனுபவிப்பாராயின் அவர் எவ்வித தேர்தல் ஒன்றிலும் வேட்பாளராக இருக்க முடியாது.

அதனால் தற்போதைய பிரச்சினை என்ன என்பது புரியும். அவர்களுக்கு விசேட மன்னிப்பு வழங்கப்ப்டுமாயின் அவர் மேற்படி தகுதியின்மையைத் தவிர்த்துக் கொள்வார்.

இதேபோன்று ஒருசம்பவம் முன்னர் நடைபெற்றதை இங்கு குறிப்பிடுவது பொருந்தும். 1974ஆம் ஆண்டில் அப்போதைய அரசியல் சட்டத்தின் படி எல்லாவல எதிரிவீரஜெயசிங்கவுக்கு நிகழ்ந்தது.

அரசியலமைப்பின் 91ஆவது பந்தியின் படி இச்சம்பவம் தொடர்பில் விளக்கமளிக்கும் போது அரசியல்வாதி ஒருவர் தனது பாராளுமன்ற உறுப்புரிமையை இழந்து விடுகிறார் என்பதாகத் தெரிகிறது.

இந்த நாட்டுக்குத் தேவையான சட்டங்களை இயற்றும் இடம் பாராளுமன்றமே. மக்களுக்காக சட்டம் இயற்றுவதும் இங்கோயே. மக்களிற்கான நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதும் பாராளுமன்றமே. அரசியலமைப்பின் 4ஆவது பந்தியில் குறிப்பிடுவதும் இதுவே.

நீதி, நீதிமன்றத்தினாலேயே அமுல்படுத்தப்படுகிறது. சில வேளைகளில் அது பாராளுமன்றத்திலும் நடைபெறும். பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் தகுதிபற்றி ஆராயப்படுதலையும் உதாரணமாகக் கொள்ளலாம்.

எனவே வெவ்வேறு பிரச்சினைகளை அந்தந்த கோணங்களில் பார்ப்பதே சிறந்தது. உயர் நீதிமன்றமும், மேல் முறையீட்டு நீதிமன்றமும் இதில் பாரபட்சம் காட்டுவது கூடாது. எஸ்.பி.திஸாநாயக்க பாராளுமன்ற உறுப்பினராக இருந்த போதிலும் நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்துக்குத் தண்டனை வழங்கும் உரிமை உயர்நீதி மன்றத்துக்கு உள்ளது. ஆயினும் அவர் தனது பாராளுமன்ற உறுப்புரிமையைப் பெற வேண்டுமாயின் பெருபாலான பாராளுமன்ற உறுப்பினர்களின் வாக்குகளைப் பெறவேண்டும். அவரின் பதவிக் காலம் முடியும் வரை அவர் பாராளுமன்ற கூட்டங்களில் சமூகமளிக்கலாம் என சபாநாயகர் கருதினாலும், அவர் பாராளுமன்றம் வருவதையாரும் தடுக்கமுடியாது. எனவே இப்பிரச்சினையில் தீர்க்க வேண்டியவை பல உள்ளன. ஒவ்வொருவரும் ஒவ்வொரு அபிப்பிராயத்தைக் கூறலாம்.

எஸ்.பி.திஸாநாயக்கவை விடுதலை செய்யவேண்டுமாயின் அந்தச் சட்டங்களை மாற்றியமைக்கும் பணியையும் பாராளுமன்றமே செய்யவேண்டும் அதற்குப் பாராளுமன்றப் பெரும்பான்மையைப் பெற்று இந்தத்தீர்ப்பை இரத்து செய்யும் வகையில் பிரேரணை ஒன்றை கொண்டு வரவேண்டும். அந்த வகையில் திஸாநாயக்க பாராளுமன்றம் வரமுடியும்.

இவ்வாறான சம்பவங்கள் கடந்த காலங்களில் நடைபெற்றேயுள்ளன. அன்று சரத்முத்தெட்டுவேகம கலவான் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இழந்த போது அந்த வெற்றிடத்துக்குப் பிலிப்பிட்டியவை நியமன எம்.பி.யாக நியமிக்க சபாநாயகர் முன்மொழிந்தபோது அது செல்லுபடியாகாமல் பிலிப்பிட்டிய இடைத் தேர்தல் ஒன்றின் மூலம் தெரிவானார். இதிலிருந்து பாராளுமன்றமும் சட்டத்தை இயற்றலாம் என்பது புலனாகிறது.

1960 ஆம் ஆண்டு தேசிய விடுதலை முன்னணி சார்பில் வெலிமட தொகுதியிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினரான ராஜரத்னவுக்கு எதிராக பதுளை நீதிமன்றில் நடந்த வழக்கில் அவருக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. அவருக்கு அத்தண்டனை தமிழர் ஒருவரின் கடையை உடைத்தமையினால் வழங்கப்பட்டது. இதற்காக அவர் பாராளுமன்றத்துக்கு முன்னால் உண்ணாவிரதம் இருந்தார். அதனையடுத்து சிறிமாவின் அமைச்சர்கள் கூடி கட்சி பேதமின்றி அவருக்கு மன்னிப்பு வழங்க வேண்டும் எனக் கோரியதுடன், அவருக்கு இடைத்தேர்தலில் போட்டியிடும் தகுதியும் கிடைத்தது. வெற்றியும் பெற்றார். இவ்விரு சம்பவங்களையும் நோக்கும் போது நீதிச்சேவைக்கு களங்கம் ஏற்படாது அனைத்து அரசியல்வாதிகளும், எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும் என்பது புரிகிறது. பாராளுமன்ற உறுப்பினர்களின் மனித உரிமைகள் தொடர்பாக ஆராய பாராளுமன்றத்துக்கு எல்லையில்லாத தகுதியிருக்கின்றது.

அண்மைக்காலமாக பாராளுமன்றம் தனது தகுதிகளுக்கேற்ப நடந்து கொண்டதில் பாராளுமன்றத்துக்கும் நீதிச் சேவைக்குமிடையே கயிறுழுத்தல்கள் நடைபெற்று வந்துள்ளன. இவற்றால் நாட்டுக்கோ, மக்களுக்கோ நன்மை ஏதும் கிடைக்கமாட்டா எதிர்கால சந்ததியினரும் இந்தக் கேள்விக்கு விடைகாண முடியாது போய் விடும்.

சமிந்த முனசிங்க
(லங்காதீப)
**மொழியாக்கம் : வடிவேல்**

சமூக விரோத செயல்களைக் கட்டுப்படுத்த ஊடகத்துறையினரும் ஒத்துழைக்க வேண்டும். அரசியலில் ஆழ ஊடுருவி செயற்பட வேண்டும்.

எவ்வாறேனும் திஸாநாயக்க மட்டுமே இந்தத் தவறை செய்திருப்பதாக கருதுவது அநியாயமாகும். இது



போன்ற சம்பவங்கள் பல நிகழ்ந்துள்ளதை மறந்து விடக்கூடாது. இவருக்கு வழங்கிய தண்டனைக்கு எதிராகப் பொது மக்களும் கிளர்ந்து எழக்கூடும். அப்போது உயர் நீதிமன்றம் என்ற அமைப்பு இதை விட கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். பொது மக்களின் முடிவை அவ்வாறு வெளிப்படுத்த முயற்சிக்கலாம். சில தவிர்க்க முடியாத நேரங்களில் பொது மக்கள் கிளர்ந்தெழுவதை தவிர்க்க முடியாமல் போகலாம்.

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட உறவுகளுக்கு உதவுக புலம் பெயர்ந்த தமிழர்களிடம் த.பு.கழகம் வேண்டுகோள்

தமிழர் தாயகத்தில் பெரும் வெள்ளத்தால் [illegible]வுகளைச் சந்தித்து பாதிக்கப்பட்டு நிர்க்கதியாகியுள்ள ஒரு இலட்சத்திற்கும் மே[illegible]ட எம்மக்களுக்கு உடனடியாக உதவிகளை வழங்க முன்வருமாறு புலம்பெயர்ந்து வாழும் தமிழ் உறவுகளிடம் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அவசர வேண்டுகோளை விடுத்திருக்கின்றது.

கடந்த பல நாட்களாக தமிழர் தாயகத்தில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கால் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மிகக்கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. தம் வசிப்பிடங்களை இழந்து பாடசாலைகளிலும், பொது இடங்களிலும் இந்த மக்கள் தங்கியிருக்கின்றனர். இவர்களுக்கு சிறிலங்கா அரசினது புனர் நிவாரண நிர்வாகங்களில் இருந்து எந்தவித உடனடி உதவிகளும் வழங்கப்படவில்லை. தமிழர் தாயகப்பகுதி என்ற காரணத்தினால் சிறிலங்கா அரசினால் அசமந்தம் காட்டப்படுகின்றது. வெள்ளத்தால் அழிவுகளைச் சந்தித்து அவலப்படும் எமது மக்களுக்கு உடனடியாக அவசர உதவிகள் தேவைப்படுகின்றன. அவலப்படும் எம் உறவுகளுக்கு உதவ புலம்பெயர்வாழ் தமிழ் உறவுகள் முன்வர வேண்டும் என்று தமிழர் புனர்வாழ்வுக்கழகம் அவசர வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது. நிதி, உடைகள் உள்ளிட்ட வகைகளில் புலம்பெயர்வாழ் தமிழ் உறவுகள் தத்தமது நாடுகளில் உள்ள தமிழர் புனர்வாழ்வுக்கழக கிளைகளில் உதவிகளை கையளிக்கலாம் என்று தமிழர்புனர்வாழ்வுக் கழகம் கேட்டுக் கொண்டுள்ளது. வெள்ள அழிவால் அவலப்படும் எம் உறவுகளுக்கு அவசரமாக உதவ முன்வருமாறு புலம் பெயர்வாழ் தமிழ் உறவுகள் வேண்டப்படுகின்றனர். மட்டக்களப் பில் 68 ஆயிரம் பேரும், அம்பாறையில் 40 ஆயிரம் பேரும், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய தமிழர் தாயக மாவட்டங்களில் இதே அளவு மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கு அவசர உதவிகளை வழங்குவதில் தற்போது தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மும்முரமாக ஈடுபட்டு வருகிறது.

## ஆ.அ.வங்கியின் நிதியுதவியுடன் கிழக்கில் 225 கிராமங்கள் அபிவிருத்தி செய்யத் திட்டம்

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் கிழக்கில் 225 கரையோரக் கிராமங்கள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. வடக்கு கிழக்கு மாகாண சமுதாய கரையோர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இது முன்னெடுக்கப்படவுள்ளது.

இது பற்றி திருகோணமலையில் இயங்குகின்ற தொண்டர் நிறுவனங்களுக்கு விளக்கும் கூட்டம் ஒன்று நடைபெற்றது. திருகோணமலை மாவட்ட தொண்டர் நிறுவனங்களின் இணைய அலுவலகத்தில் நேற்று முன்தினம் காலை 11.30 மணிக்கு நடைபெற்ற கூட்டத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கி அதிகாரிகளுடன் வடக்கு கிழக்கு மாகாண சமுதாய கரையோர அபிவிருத்தித் திட்டத்தின் மாகாண பணிப்பாளர் ஏ.சி.குரூஸ், திருகோணமலை பணிப்பாளர் க.தமிழ்செல்வன், உதவிப் பணிப்பாளர் வி.கௌரிதரன் ஆகியோர் கலந்து கொண்டனர். மாகாணப் பணிப்பாளர் குரூஸ் அங்கு உரையாற்றுகையில், கிழக்கு மாகாணத்தில் பொத்துவில் தொடக்கம் புல்மோட்டை வரையான கிராமங்கள் இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன. இவற்றில் 146 கிராமங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இவை ஒவ்வொன்றும் 2 மில்லியன் ரூபாய்கள் செலவில் அபிவிருத்தி செய்யப்படும். மீனவர்களின் அடிப்படைத் தேவைகள், பாலர் பாடசாலைகள், சனசமூக மண்டபங்கள், களஞ்சிய வசதிகள் என்பன இத்திட்டத்தின் மூலமாக அபிவிருத்தி செய்யப்படும். இவற்றுக்கு மேலாக மட்டக்களப்பில் வாழைச்சேனை மீன்பிடித்துறைமுகம் அபிவிருத்தி செய்யப்படும். திருக்கோணமலையில் கொட்பே (குடாக்கரை) மீன்பிடித்துறைமுகம் அபிவிருத்தி செய்யப்படும். குடாக்கரை துறைமுகத்திற்கு 24 மணிநேரமும் மீன்பிடி படகுகள் சென்று வருவதற்கு கடற்படையினர் அனுமதி வழங்காத நிலைமை காணப்படுகின்றது. அத்துடன் இப்பிரதேசம் சுற்றுலா பகுதியாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளதால் இது பொருத்தமற்றதாக காணப்படலாம். இருப்பினும் 3 வருடங்களுக்குள் இத்திட்டத்தை இங்கு நடைமுறைப்படுத்த முடியாது விட்டால் திருகோணமலை மீனவர்களின் நன்மைக்காக புடவைக்கட்டில் ஒரு மீன்பிடித்துறைமுகம் அபிவிருத்தி செய்யப்படும் என்றார். இவற்றுக்கு புறம்பாக திருகோணமலையில் மேலும் 25 கிராமங்கள் தலா 15 இலட்சம் செலவில் அபிவிருத்தி செய்யவும் தாங்கள் திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவித்தார். இக்கிராம அபிவிருத்திகள் பிரதேசத்தில் இயங்கும் நிறுவனங்களின் துணையுடன் மேற்கொள்ளப்படுமெனவும், ஒவ்வொரு தொண்டர் நிறுவனங்களுக்கும் இவ் அபிவிருத்தி வேலைத்திட்டத்தில் வாய்ப்புக்கள் வழங்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பிரிமா நிறுவனம் வேண்டுமென்றே கோதுமை மாவுக்கு தட்டுப்பாட்டை ஏற்படுத்துகிறதென்கிறார் பெர்ணாண்டோபுள்ளே

(கொழும்பு)

**கோதுமை மாவுக்கான தட்டுப்பாட்டை பிரிமாநிறுவனம் வேண்டுமென்றே ஏற்படுத்தி வருவதாக நுகர்வோர்துறை அமைச்சர் ஜெயராஜ் பெர்ணான்டோபுள்ளே குற்றம் சுமத்தியுள்ளார்.**

உள்ளூரில் கோதுமை மா தட்டுப்பாட்டை வெளிக்காட்டும் பிரிமா நிறுவனம் நாளொன்றுக்கு நூற்றுக்கணக்கான மெற்றிக் தொன் கோதுமை மாவை ஏற்றுமதி செய்வதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார், எனவே விரைவில் அமெரிக்காவில் இருந்து நாட்டிற்கு தேவையான கோதுமை மா இறக்குமதி செய்யப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை குழந்தைகளுக்கான பால்மா வகைகள் உட்பட சமையல் எரி வாயுக்களின் விலையில் மேலும் உயர்வு ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது தொடர்பில் ஆராய நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை கூடுகிறது.

# கொலைமுயற்சி தொடர்பாக தேடப்பட்ட தமிழ் இளைஞர் கனடா பொலிசாரால் கைது

கொலை முயற்சி வழக்கில் தேடப்பட்டுவந்த ஈழத்தமிழரான ஹெல்மட்' தவா என்ற ஈழத்தமிழர் கனேடியப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார் என்று கனேடிய 'நஷனல்' போஸ்ட்' பத்திரிகையின் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த ஜுன் மாதம் கனடாவில் வடக்கு மொன்றியலில் ஈழத்தமிழ் இளைஞர் குழுக்கள் கத்தி, வாள், பொல்லுகளுடன் மோதிக்கொண்ட சம்பவத்தில் கொலை செய்ய முயற்சித்தார் என்ற சந்தேகத்தின் பேரில் சம்பந்தப்பட்ட நபர் தேடப்பட்டு வந்தார் என்றும் - கடந்த ஆறு மாதங்களாக கனேடியப் பொலிசாருக்குத் தண்ணி காட்டிவந்த இவர், கடந்த வியாழக்கிழமை தமக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் படி இவரது வீட்டில் வைத்தே கைது செய்யப்பட்டார் என்றும் - கனேடிய குடிவரவுப் பிரிவுக்கான விசேட அதிரடிப் படையினர் அறிவித்துள்ளனர். குறிப்பிட்ட சம்பவத்தில் ஈழத்தமிழ் இளைஞர் குழுக்களைச் சேர்ந்த 7 பேர் கைது செய்யப்பட்டனர் என்றும் ஹெல்மட் தவா செல்வராஜா (வயது 24) என்பவரும் கொலின் செல்லத்துரை (வயது 31) என்பவரும் சம்பவ இடத்தில் தப்பிவிட்டதால் பொலிசார் தேடி வந்தனர் என்றும் கொலின் செல்லத்துரை என்பவர் இன்னமும் தேடப்பட்டு வருகின்றார் என்றும் கனேடியப் பொலிசார் மேலும் தெரிவித்துள்ளனர். 1990ம் ஆண்டு முதல் கனடாவில் கோஷ்டி மோதல்களில் ஈடுபட்டுவந்த விவிரி மற்றும் ஏ.கே.கண்ணன் குழுக்கள் தற்போது ரொறன்றோ, மொன்றியல், வன்கூர் பகுதிகளில் உள்ளனர் என்று புலனாய்வுத்துறை மூலம் கிடைத்த தகவலை அடுத்து கனேடியப் பொலிசார் தமது நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளனர்.

# எஸ்.பி.யை வழக்கறிஞர் குழு சந்திக்க சிறைச்சாலை ஆணையாளர் அனுமதி

(கொழும்பு)

சிறைவைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சரும் ஜக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினருமான எஸ். பி. திஸாநாயக்கவை சந்திப்பதற்கு ஆறுபேர் கொண்ட வழக்கறிஞர் குழுவிற்கு சிறைச்சாலை ஆணையாளர் அனுமதி அளித்துள்ளார்.

இதன் அடிப்படையில் கிழமை நாட்களில் வழக்கறிஞர்கள் இவரைச் சந்தித்து இவரது வழக்குத் தொடர்பாக ஆலோசனை நடத்துவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை முதன்முறையாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் காமினிலொக்குகே நேற்று முன்தினம் எஸ். பி. திஸாநாயக்கவை பார்வையிட சென்ற போது பார்வையாளர் குறிப்பு புத்தகத்தில் கையொப்பமிட்டுள்ளார். சிறைச்சாலையின் புதிய பாதுக்காப்பு நடவடிக்கையின் பேரிலேயே இந்த நடைமுறை மேற்கொள்ளப்பட்டதாக சிறைச்சாலை ஆணையாளர் றூமி மர்சூக் தெரிவித்துள்ளார்.

# விசேட அதிரடிப்படையின் உயர் மட்டத்தில் மாற்றம்

(கொழும்பு)

விசேட அதிரடிப்படைப் பிரிவில் பல மாற்றங்கள் ஏற்படுத்தப் படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து பிரதி பொலிஸ்மா அதிபர் நிமால் லியூக் கருத்து வெளியிட்ட போது;காலத்திற்கு காலம் மேற்கொள்ளப்படும் இந்த மாற்றம் வழமையானது எனவும், இதில் எந்த விதமான விசேட நோக்கங்களும் இல்லை எனவும் தெரிவித்துள்ளார். இந்த வகையில் கிழக்கு மாகாண அதிரடிப்படையின் இயக்குனராக பொலிஸ் அத்தியட்சகர் உப்புல் செனவிரட்ண பதவி ஏற்றுள்ள அதேவேளை கிழக்கு மாகாணத்தின் இயக்குனராக பதவி வகித்து வந்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வசந்த ரட்ணாயக்க நிர்வாக இயக்குனர் பதவியையும் ஏற்றுள்ளார். (32)

# பா.உறுப்பினர்களுக்கு இனிமேல் பிளாஸ்ரிக் குவளை வழங்க பணிப்பு

(கொழும்பு)


பாராளுமன்ற அங்கத்தவர்கள் தங்கள் மேசைகளில் தண்ணீர் அருந்துவதற்கு வைக்கப்பட்டிருக்கும் கண்ணாடிக்குவளைகளுக்குப் பதிலாக பிளாஸ்டிக் குவளை வைக்க வேண்டும் என பாராளுமன்ற சபாநாயகர் வி.ஜே.மு. லொக்குபண்டார அறிவித்துள்ளார்.

கடந்த வாரம் பாராளுமன்றத்தில் நடந்த கலவரத்தின் பொழுது பாராளுமன்ற அங்கத்தவர் மகேஸ்வரன் மேசைமேல் வைக்கப் பட்டிருந்த கண்ணாடிக் குவளையால் செங்கோலுக்கு வீசி எறிந்த சம்பவத்தின் பின் இக்கட்டளை சபாநாயகரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

# அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளுடன் கலந்துரையாடல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் அரச சார்பற்ற நிறுவனங்கள் மேற்கொண்ட திட்டங்கள், எதிர்வரும் 2005ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட வேண்டிய திட்டங்கள் குறித்த கலந்துரையாடல் கடந்த ஞாயிற்றுக் கிழமை கொக்கட்டிச்சோலை சோலையகத்தில் நடைபெற்றது.



அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட இச்சந்திப்பில் மட்டு அம்பாறை துணைத் தளபதி பிரபா, மட்டு அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒருங்கிணைப்பாளர் அரியதாஸ், துணைப் பொறுப்பாளர் சுபத்திரன், ஊடகத்துறைப் பொறுப்பாளர் மனோஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அரச சார்பற்ற நிறுவனங்களின் சார்பாக உலக உணவுத் திட்டம், ஹெயார், அக்சன் பெயிம், ரி.டி.எச்.வூஸ்க், யூ.என்.டி.பி, வன்முறையற்ற சமாதான அணி, யுனிசெப், வேள்ட்விசன், ஜி.ரி.சற், ஒக்ஸ்பாம் உட்பட நிறுவனப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி தொடர்பாக சரியான திட்டங்கள் இனம் காணப்பட வேண்டும். விடுதலைப் புலிகளிடம் மக்களால் தெரிவிக்கப்பட்ட பல பிரச்சினைகள் உள்ளன. அவை தொடர்பாகவும் இந்த நிறுவனங்கள் கவனத்திற் கொண்டு நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் ஆலோசனை தெரிவிக்கப்பட்டது.

# புலிகளின் பகுதிக்குள் தரைதட்டியுள்ள சீமெந்து ஏற்றிவந்த வர்த்தகக் கப்பல்

சீமெந்து ஏற்றிவந்த - வெளிநாட்டில் பதிவு செய்யப்பட்ட - வர்த்தகக்கப்பல் ஒன்று சரியாக நங்கூரமிடாததால் திருகோணமலையில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள கடற் பகுதிக்குள் சென்று தரைதட்டியுள்ளது.

சுமார் 24 மியன்மார் சிப்பந்திகளுடன் தரைதட்டியுள்ள கப்பலை மீட்கும் நடவடிக்கைகளை கடற்படையினர் மேற்கொண்டுள்ளனர். திருகோணமலையிலுள்ள மிட்சுயி சீமெந்து நிறுவனத்துக்கு சீமெந்து ஏற்றிவந்த இந்தக்கப்பல், பேய்முனைக்கு அண்மையில் உள்ள கவிலியா கலங்கரை விளக்குக்கு அண்மையில் நங்கூரமிடப்பட்டது. ஆனால் சரியாக நங்கூரமிடாததால் சுமார் ஒரு கடல்மைல் தொலைவுக்கு அசைந்து சென்ற கப்பல் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள கடற்பிரதேசத்துக்குள் தரைதட்டியுள்ளது என்று கடற்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. கப்பலிலிருந்து சரக்கு இன்னமும் இறக்கப்படவில்லை என்றும் கப்பலின் நான்காவது மாடியில் சிறு வெடிப்பு ஏற்பட்டு அதனூடாக நீர் உட்புகத் தொடங்கியுள்ளது என்றும், அதனை வெளியேற்றும் நடவடிக்கையில் கப்பலில் உள்ளவர்கள் ஈடுபட்டுள்ளனர் என்றும், அவை மேலும் தெரிவித்தன. இதேவேளை, தரைதட்டியுள்ள கப்பலை புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள்ளிருந்து வெளியே கொண்டுவரும் நடவடிக்கைக்காக மஹாநுவர என்ற விசேட இழுவைக் கடல்கலம் கொழும்பிலிருந்து திருகோணமலை நோக்கி நேற்று மாலை புறப்பட்டது. கப்பலை மீட்பதற்கு கடற்படையினர் ஆயத்தமாகி வருகின்றனர்.

# திருமலை மாவட்ட நிலவரம் குறித்து த.கூட்டமைப்பினர் கூடி ஆராய்வு

(திருகோணமலை)

தமிழ்க் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட கிளை கடந்த ஞாயிற்றுக்கிழமை, திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இரா சம்பந்தனின் வாசஸ்தலத்தில் கூடி திருகோணமலை நகர், மாவட்டம் ஆகியவற்றின் தற்போதைய நிலவரம் குறித்து ஆராய்ந்தது.

குறிப்பாக திருகோணமலை நகர சபையை மாநகர சபையாக தரம் உயர்த்துவது தொடர்பாக மகாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சு விசாரணைக்குழு ஒன்று நியமித்துள்ளது குறித்து கிளை உறுப்பினர்கள் தீவிரமாக பரிசீலனை செய்தனர். மாநகர சபையாக தரம் உயர்த்துவதால் ஏற்படும் சாதக பாதகவிளைவுகள் குறித்து கருத்துக்கள் கூட்டத்தில் வெளியிடப்பட்டன. திருகோணமலை நகரில் குப்பை கூழங்கள் ஒழுங்காக அகற்றப்படமால் இருப்பதால் ஏற்பட்டுள்ள சுகாதார சீர்கேடுகள் பற்றியும் ஆராயப்பட்டன. தற்போதைய அரசியல் நிலவரம் குறித்து பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் உறுப்பினர்களுக்கு விளக்கமளித்தார். திருமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ப.துரைரட்ணசிங்கம் கூட்டத்திற்கு தலைமை வகித்தார். (25)

# மேற்கு அவுஸ்திரேலியாவில் மாவீரர் நாள் நிகழ்வுகள்

மேற்கு அவுஸ்திரேலியா பேர்த் நகரில் கடந்த சனிக்கிழமையன்று மாவீரர் நாள் நிகழ்வுகள் உணர்வுபூர்வமாக நடைபெற்றது.

தமிழீழ தேசியக் கொடியேற்றத்துடன் ஆரம்பமான இந்த மாவீரர் நாள் நிகழ்வில் கவிதைகள், நடனம், வில்லுப்பாட்டு போன்ற நிகழ்ச்சிகளுடன், Prabakaran a Leader for All Seasons என்ற ஒளிப்படத் தொகுப்பு நூலும் வெளியிடப்பட்டது. தமிழீழ விடுதலைப் புலிகளின் அவுஸ்திரேலிய பரப்புரைப் பொறுப்பாளர் சிறப்புரை நிகழ்த்தினார். தமிழீழத் தேசியத் தலைவரின் மாவீரர் நாள் உரை அகலத்திரையில் காண்பிக்கப்பட்டது. பேர்த் நகரைச் சேர்ந்த நூற்றுக் கணக்கான தமிழ் மக்கள் மிகுந்த எழுச்சியுடன் இந்த நிகழ்வில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# கண்ணீர் காணிக்கை

கொல்லங்கலட்டி தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் வள்ளிபுனம் புதுக்குடியிருப்பை வதிவிடமாகவும் கொண்ட

**அமரர்-சாம்பசிவம் இரகுலதரன் (ரகு)**

ஆளுகை அலுவலர் வருவாய்ப்பகுதி வவுனியா மாவட்டம்

பொறுப்பாளர்,
பணியாளர்கள்,
வருவாய்ப்பகுதிச் செயலகம்,
புளியங்குளம்

(5407)

# துயர் பகிர்வு

பிறப்பு 10 ♦ 01 ♦ 1926



இறப்பு 16 ♦ 11 ♦ 2004

**அமரர் பெரியகறுப்பன் குருவம்மா**

கிளிநொச்சி அபிவிருத்தி அகதிகள் புனர்வாழ்வுக்கழக காவலாளி திரு.பெ.ஐயாவு அவர்களின் தாயார் அமரர் பெரியகறுப்பன் குருவம்மா அவர்களின் மறைவையொட்டி எமது நிறுவனத்தினரின் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிராத்திக்கின்றோம்.

தகவல்
நிறுவாகத்தினர், இணைப்பாளர்,
பணியாளர்கள்,
கிளி. அ. அ. பு. கழகம்.

(5408)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 1950 08 09



மறைவு 2004 11 17

**அமரர் பசுபதி குணரத்தினம்**

**(பாண்டியன்குளம், பிரதேசசபை பண பாளர் இல.16 கணேசபுரம் கிளிநொச்சு)**

விண்ணோடு நீ கலந்து
முப்பத்தொரு நாள் ஆனதையா
மூன்னூறு நாளானாலும்
உன் நினைவு அழியாது!
கண்ணுறங்கும் போதும் உன்
எண்ணம் அலை மோதும்

அன்னாரின் வீட்டுக்கிருத்தியம் 17.12.2004 வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இவ் ஆத்ம சாந்தி பிரார்த்தனையில் தாங்களும் குடும்ப சகிதம் வருகை தந்து பிரார்த்திப்பதோடு, மதிய போசனத்தில் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சாந்தி சாந்தி சாந்தி

**இல.16/1 கணேசபுரம், கிளிநொச்சி.**

செ. சண்முகநாதன், குடும்பத்தினர்,
பெறாமக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(5404)

## கரைச்சிப் பிரதேசசபை கிளிநொச்சி

# 2005ஆம் ஆண்டுக்கான வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்தல்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வழங்கு பொருட்களையும், சேவைகளையும் வழங்குவதற்கு தம்மைப் பதிவு செய்து கொள்ள விரும்பும் பிரபல்யமான வழங்குநர்கள் / உற்பத்தியாளர்கள் / ஒப்பந்தகாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 30.12.2004 திகதி வரையும் எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும்.

## பொருட்கள்

01) காகிதாதிகள், எழுது பொருட்கள்
02) அலுவலக உபகரணங்கள் (தளபாடங்கள், இரும்பு அலுமாரிகள்)
03) வைத்திய உபகரணங்கள்
04) சித்த மருத்துவ மருந்துகள்
05) கோலவுடைத் துணிகள், யன்னல் துணிகள், ஏனைய துணி வகைகள்
06) பாதணிகள், மழைக்கவசம் மற்றும் தோற்பொருட்கள்
07) கட்டடப் பொருட்கள் (சீமெந்து, ஓடுகள் முதலியன)
08) தீந்தைகள், நிறந்தீட்டும் பொருட்கள் முதலியன
09) கிறவல்
10) நீர் வழங்கு பொருட்கள் பி.வி.சி. குழாய்கள் முதலியன
11) வாகன இயந்திர உதிரிப்பாகங்கள், துணை உறுப்புக்கள்.
12) மின்சார இயந்திரப் பொருட்கள், மின் கருவிகள்.
13) கிடுகுகள்
14) எரிபொருள், உராய்வு நீக்கிகள், கிறீஸ்
15) இரும்புப் பொருட்கள்.
16) பனை மரங்கள், சலாகைகள்.
17) நூலகத்திற்குரிய நூல்கள்.
18) வாகனங்களிற்கான பற்றறிகள், ரயர், ரியூப் முதலியன.
19) தீராந்திகள், நீப்பைகள், பலகைகள்.
20) தும்புத்தடி, விளக்குமாறு, நார்க்கடகம், கால்துடைப்பம், இழைக்கயிறு, தேடாக்கயிறு முதலியன
21) சுத்திகரிப்புப் பிரிவுகளுக்கான கிருமி நாசினிகளும், மருந்துகளும்.
22) கணனி, கணனிகளுக்கான உதிரிப்பாகங்கள், போட்டோப் பிரதி இயந்திரம், போட்டோ பிரதி இயந்திரத்திற்கான (ரொனீயா, கனொன், சார்ப்) வகை களுக்கான உதிரிப்பாகங்கள் வழங்கல்.

## சேவைகள்

01) அச்சிடுதல்
02) தட்டச்சு இயந்திரம் திருத்தம்
03) மோட்டார் வாகனங்கள் திருத்தம்
04) ரீயூ ஒட்டுதல்.. (வாகனங்கள்)
05) ஓட்டு வேலைகள், உலோக வேலைகள்
06) ஏற்றியிறக்கல் வேலைகளுக்கு பாரம் குறைந்த வாகனங்களை வாடகைக்குவிடல், (சுத்திகரிப்பு வேலைப்பகுதி, ஏற்றியிறக்குதல் வேலைகளுக்கு ரக்ரர் வாடகைக்கு விடல்)
07) கோலவுடை தைத்தல்
08) மின் மோட்டர்கள், மினி விசிறிகள், ஜெனறேற்றர்கள், குளிர்சாதனப் பொட்டிகள் திருத்தம்.
09) மின் கலங்களுக்கு மீள மின்வலுவூட்டல்
10) றப்பர் முத்திரை தயாரித்தல், புளக் தயாரித்தல்
11) வாகனங்கள் சேவிஸ் செய்தல்
12) கணனி இயந்திரம் போட்டோக் கொப்பி இயந்திரம் திருத்தம் செய்தல்

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வழங்கல்கள் சேவைகள் 2005" எனக் குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலம் சகல விண்ணப்பங்களும் பின்வருமாறு சமர்ப்பிக்க வேண்டும்.

வழங்கல்களுக்கும், சேவைகளுக்குமான விண்ணப்பங்கள் **விசேட ஆணையாளர், கரைச்சிப் பிரதேச சபை, கிளிநொச்சி** என முகவரியிடப்படல் வேண்டும்.

ஒவ்வொரு வழங்கல், சேவைகளுக்கும் தனித்தனியான விண்ணப்பம் அனுப்பப்படல் வேண்டும். இப்படிவங்களை கரைச்சிப் பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் பதிவுக் கட்டணமாக (ரூபா 180.00 உடன் மேலதிகமாக வற்வரி ரூபா 27.00) ரூபா 207.00 பெறுமதியான காசுக்கட்டளை விசேட ஆணையாளர் கரைச்சிப் பிரதேச சபை என்ற பெயருக்குப் பெறப்பட்டு இணைத்து அனுப்பி வைக்க வேண்டும். பணமாகச் செலுத்த விரும்புபவர்கள் சபையின் வருமானக் கிளையில் நேரடியாக வேலை நாட்களில் செலுத்த முடியும்.

கூறுவிலைகள் பதிவு செய்யப்பட்டவர்களிடமிருந்து கோரப்படும்.

கோரப்படும் பொழுது கூறுவிலைகள் சமர்ப்பிக்கத் தவறும் அல்லது உரிய நேரத்திற்கு பொருட்கள் சேவைகள் வழங்கத் தவறும் அல்லது குறிப்பிடப்படும் மாதிரிகளுடன் ஒத்திராத பொருட்கள் சேவைகள் வழங்கும் எந்த ஒரு வழங்குநரின் பெயரும் முன்னறிவித்தலின்றி பதிவுப் புத்தகத்தில் நீக்கப்படும்.

**(பொன். நித்தியானந்தம்)**
விசேட ஆணையாளர்,
கரைச்சிப் பிரதேச சபை,
கிளிநொச்சி.

திகதி: 2004-12-14

(சி-10970)

**பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி.**

## மீள் கேள்வி அறிவித்தல்

2004.12.06 ஆம் திகதி நடைபெற்ற மாவட்ட வைத்தியசாலை, கிளிநொச்சிக்கு உலர் உணவு வழங்குவதற்கான ஒப்பந்தகாரரை தெரிவு செய்வதற்காக நடை பெற்ற கூட்ட தீர்மானத்தின் படி கேள்வி இரத்துச்செய்யப்பட்டு மீண்டும் 2004.12.24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை 10.30 மணிக்கு கேள்விச்சபைக் கூட்டமானது நடைபெறவுள்ளதால் கேள்வியாளர்கள் 2004.12.23 ஆம் திகதி 4.00 மணிக்கு முன்னர் விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**வைத்தியகலாநிதி த.சத்தியமூர்த்தி,**
**மா.சு.சே.பி. பணிப்பாளர்**
**கிளிநொச்சி.**

(சி.11034)

## யாழ்ப்பாணம்-மாநகரசபை

**நல்லூர் செங்குந்தா பொதுச்சந்தைக் கடைகளை**
**குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல்-2004**

**மாநகரசபைக்குச் சொந்தமான நல்லூர் செங்குந்தா பொதுச்சந்தைக்கடைகளில் கீழ்த்தளக்கடைகள் இல:-02, 04,10,11 மேல்தளக்கடைகள் இல:- 2/1, 6/1,12/1 என்பவற்றிற்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ். மாநகர ஆணையாளராகிய என்னால் 28.12.2004ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப.2.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.**

**கேள்வி நிபந்தனைகள் ஏற்கனவே குத்தகை அறிவித்தலில் வழங்கப்பட்டவையாகும். உரிய கேள்வி கோரல் நிபந்தனைகளைப் பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம்.**

| | |
|---|---|
| கேள்விப் படிவம் வழங்கும் இறுதித்திகதி | **28.12.2004** செவ்வாய்க்கிழமை காலை12.00 மணிவரையும் |
| கேள்விகள் ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதி | **28.12.2004** செவ்வாய்க்கிழமை பி.ப 2.00மணிவரையும் |
| கேள்வி திறக்கும் திகதி | **28.12.2004**செவ்வாய்க்கிழமை பி.ப 2.00 மணிக்கு |
| கடைகள் | ஆகக் குறைந்த கேள்வித்தொகை (பெறுமதிசேர்வரி (Vat) தவிர்த்து) |
| 01. கீழ் தளக்கடைகள் (கடைஒன்றுக்கு) | 360,000/= |
| 02. முதலாம் மாடிக்கடைகள் (கடை ஒன்றுக்கு) | 180,000/= |

**மேலதிக விபரங்கள் யாவும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

**கலாநிதி க.குணராசா,**
**ஆணையாளர்,**
**மாநகரசபை,**
**யாழ்ப்பாணம்.**

**திகதி:-06.12.2004** (சி.10971)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில்
1939. 06. 09

விண்ணில்
2004. 11. 17

2004 – 11 – 17 இல் இறைபதம் எய்திய
எம் இதய தெய்வம்

## அமரர் நாகமணி நாகராசா

**(ஓய்வு பெற்ற முன்னாள் C.T.B சாரதி மன்னார்)**
**கீரி, மன்னார்.**

அன்பின் திருவுருவமாய், பாசத்தின் பிறப்பிடமாய் பண்பின் சிகரமாய் ஊர் புகழும் உத்தமனாய் வாழ்ந்து எமக்கெல்லாம் வழிகாட்டிய தெய்வமே! நீங்கள் மறைந்து ஒரு மாதம் சென்றாலும் உங்கள் நினைவு என்றென்றும் எம்மை விட்டு நீங்காது. உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

முகவரி:-
தாழ்வுபாடு வீதி,
கீரி,
மன்னார்.

தகவல்:-
மனைவி, பிள்ளைகள்,
மருமகன்

(சி.11020)

## இந்.ஹஜ் பயணிகள் மதினா வருகை

(டுபாய்)

இந்தியாவைச் சேர்ந்த ஆயிரத்து நூற்றிஅறுபது (1160) ஹஜ் பயணிகள் நேற்று முன்தினம் சவுதி அரேபியா வந்தடைந்தனர்.

இந்தியாவின் பல்வேறு மாநிலங்களை சேர்ந்த முஸ்லிம்கள் மக்காவுக்கு புனித யாத்திரை மேற்கொண்டுள்ளனர். முதல் கட்டமாக குஜராத், ஆந்திரா, கேரளா மாநிலங்களை சேர்ந்த ஆயிரத்து நூற்றி அறுபது (1160) பயணிகள் நேற்று முன்தினம் மதினா வந்தடைந்தனர். இந்திய பயணிகள் நேரடியாக மதினாவை வந்தடைவது இதுவே முதல் முறை. இந்திய ஹஜ் கமிட்டி தலைவர் தன்வீர் அகமது இந்திய தூதரக அதிகாரி ஆசப் சயீத் ஆகியோர் இந்தியப் பயணிகளை வரவேற்றனர். தமிழகம் மற்றும் காஷ்மீரைச் சேர்ந்த பயணிகள் ஜெட்டா வந்தடைந்த போது அவர்களை இந்தியத் தூதர் எம்.ஓ.எச். பாரூக் வரவேற்றார்.

## பாக்.பிரதமருடன் பேசியதை வெளியிடுக பா.ஜ.க.கோரிக்கை

பாகிஸ்தான் பிரதமர் ஷௌகத் அசீஸுடன் பேசியது குறித்து பிரதமர் மன்மோகன் சிங் வெளியிட வேண்டும் என பா.ஜ.க கோரியுள்ளது.

மூத்த பா.ஜ.க தலைவர் ஜஸ்வந்த்சிங் கடந்த ஞாயிற்றுக் கிழமை நிருபர்களிடம் கூறியதாவது:-

அசீஸுருடன் பேசியது குறித்து மன்மோகன் சிங் இதுவரை எதையும் கூறவில்லை. அதைத் தெரிந்து கொள்ள நாட்டு மக்களுக்கு உரிமை உண்டு. இந்தியா - பாகிஸ்தான் உறவைப் பொறுத்த வரை தேசிய ஜனநாயகக் கூட்டணி எந்தப் பிரச்சினையிலும் முதல் நடவடிக்கையை எடுத்து வந்தது. தற்போது பாகிஸ்தான் கூறுவதற்கு பதிலை மட்டும் இந்தியா அளித்து வருகிறது.


பாகிஸ்தான் அதிபர் முஷாரப்பை நியூயோர்க்கில் மன்மோகன் சிங் சந்தித்துப் பேசினார். அச்சந்திப்புக்குப் பின் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில்; பயங்கரவாதம் குறித்து எதுவும் கூறப்படாதது வியப்பளிக்கிறது. பயங்கரவாத எதிர்ப்புப் பிரச்சினையில் மத்திய அரசுக்குத் தெளிவில்லை. நிலையான கொள்ளையும் இல்லை எனத் தெரிவித்தார்.

## பரிந்துரை

(புதுடில்லி)

ஆதாயம் தேடும் வகையிலும், அற்பத்தனமான காரணங்களுக் காகவும் தொடரப்படும் வழக்குகளை தடுக்க மத்திய சட்டம் ஒன்றை கொண்டு வரவேண்டும் என சட்டக் கமிஷன் பரிந்துரை செய்துள்ளது. இது குறித்து சட்டக் கமிஷன் சார்பில் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ள 189 ஆவது அறிக்கையில் கூறியிருப்பதாவது; ஆதாயம் தேடும் வகையிலும் அற்பத்தனமான காரணங்களுக்காகவும் தொடரப்படும் வழக்குகளை தடுக்க கடந்த 1949 ஆம் ஆண்டு சென்னை மாநிலம் ஒரு தடுப்புச் சட்டத்தை அறிமுகப்படுத்தியது. இந்தச் சட்டம் செல்லும் என்று ஐந்து நீதிபதிகள் கொண்ட சுப்ரீம் கோர்ட் பெஞ்ச் கடந்த 1965 ஆண்டு அறிவித்தது. இத்தகைய வழக்குகள் எந்த நீதிமன்றத்தில் நடந்தாலும் அது சிவில் அல்லது கிரிமினல் வழக்காக இருந்தாலும் அட்வகேட் ஜெனரல் முறையீடு செய்தால் சம்பந்தப்பட்ட நீதிமன்றின் அனுமதி பெறாமல் ஐ.கோர்ட் தள்ளுபடி செய்யலாம் என்று சென்னை மாநில சட்டம் கூறுகிறது. இந்தச் சட்டத்தை அடிப்படையாக வைத்து சட்டம் கொண்டு வர மத்திய அரசு முயற்சிக்க வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது.

## ஐந்தாம் ஆண்டு நினைவு நாள்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 15 | 16 |
| 08 | 12 |
| 1975 | 1999 |

**கப்டன் புகழரசன்**

**முருகுப்பிள்ளை - நகுலேஸ்வரன்(பிள்ளையார்)**

**அச்சுவேலி தெற்கு**
**அச்சுவேலி**

தானைத் தலைவன் வழி சென்று
வரிப்புலியாய் உருவெடுத்து
கயவர் படைதனை அழித்து
களமாடி வீழ்ந்திட்ட புகழரசா
தரணியிலே எமையெல்லாம்
தவிக்கவிட்டு – நீ
கண்மூடித் துயில் கொண்டு
ஆண்டுகள் ஐந்து கடந்தோடிப்
போனதையா....
என்றென்றும் உன்நினைவில்
வாடி நிற்கும்....

முகவரி:-
தபாற்கந்தோர் அருகாமை,
விசுவமடு.

(5346)

**குடும்பத்தினர்**

***கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் கூட்டுறவு கிராமிய வங்கிகளின் சமாசம், கிளிநொச்சி.***

## பணிநிலை வேண்டுகை

01) பதவி :- கணக்கு எழுதுநர்.
சம்பள அளவுத்திட்டம் 31-99-105-10
சம்பள அளவு 6000/-6000-8100 / 100தர10-110தர10

வயது 23- 45 வரை

02) தகைமைகள் :-

அ). கூட்டுறவுப் பணியாளர் 11 சம்பள அளவுத் திட்டத்தில் கணக்குப் பதிவாளர் அல்லது கணக்கு அல்லது கணக்காய்வு எழுதுநர் பதவியில் மூன்று வருடத்துக்கு குறையாத அனுவபம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 12 ஆவது சம்பள் அளவுத்திட்டத்தில் கணக்குப் பதிவாளர் அல்லது கணக்கு அல்லது கணக்காய்வு எழுதுநர் பதவியில் ஆறு வருடத்துக்குக் குறையாத அனுபவம்.

**அல்லது**

ஆ) ஐக்கிய இராச்சிய நிறுவனத்தின் கணக்குப் பதிவாளர் இறுதிப் பரீட்சையில் சித்தியும், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனத்தில் கணக்கு அல்லது கணக்காய்வுத் துறையில் மேற்பார்வைமட்ட பதவியில் இரண்டு வருடங்களுக்குக் குறையாத அனுபவமும் அல்லது ஐக்கியராச்சிய நிறுவனத்தின் கணக்குப் பதிவாளராக இடைநிலைப் பரீட்சையில் சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்த அல்லது கைத்தொழில் ஸ்தாபனத்தில் கணக்கு அல்லது கணக்காய்வுத்துறையில் மேற்பார்வை மட்டப் பதவியில் நான்கு வருடங்களுக்குக் குறையாத அனுபவம்

**அல்லது**

இ) கூட்டுறவுப் பணியாளர் (உயர்தரம்) தராதரப் பத்திர சான்றிதழுடன் க.பொ.த. (உயர்தரம்) கணக்கியல் உட்பட மூன்று பாடங்களில் சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனத்தின் கணக்கு அல்லது கணக்காய்வுத்துறையில் மேற்பார்வை மட்ட பதவியில் நான்கு வருடங்களுக்குக் குறையாத அனுபவமும் பெற்றிருத்தல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் 25-12-2004ஆம் திகதிக்கு முன்பாக தலைவர், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்களின் சமாசம், யாழ். கண்டி வீதி, கிளிநொச்சி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

**தலைவர்,**
**கிளி/ முல்லை மாவட்ட கூட்டுறவு சங்கங்களின் சமாசம்**
**கிளிநொச்சி.**

(சி-10966)

# இரண்டாவது டெஸ்டில் சச்சின் இடம்பெறமாட்டார்?

(டாக்கா)



இந்தியா-பங்களாதேஷ் அணிகளுக்கிடையில் சிட்டக்கொங்கில் எதிர்வரும் 17 ஆம் திகதி ஆரம்பிக்கும் இரண்டாவது டெஸ்ட்போட்டியில் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் விளையாடமாட்டார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.


2-ஆவது டெஸ்டில் புதுமுக வீரர்களுக்கு வாய்ப்பு கொடுக்கப்படும் என்றும், எந்த வீரருக்கு என்று இதுவரை முடிவு செய்யப்படவில்லை. போட்டி தொடங்கும் நேரத்தில் தான் முடிவு செய்யப்படும் என்றும் கப்டன் கங்குலி தெரிவித்து இருந்தார்.

டாக்கா டெஸ்டில் டெண்டுல்கர் 248 ஓட்டங்கள் குவித்து அதிகசதம் எடுத்து இருந்த கவாஸ்கரின் சாதனையை (34) சமன் செய்தார். துடுப்பாட்டத்தின் போது டெண்டுல்கரின் இடது முழங்காலில் இன்னும் வலி இருப்பதன் காரணமாக அவருக்கு 2-ஆவது டெஸ்டில் ஓய்வு கொடுக்கலாமா? என்று அணி நிர்வாகம் ஆலோசித்து வருகிறது. 2ஆவது டெஸ்டில் டெண்டுல்கர் சதம் அடித்தால் கவாஸ்கரின் சாதனையை முறியடிப்பார் டெண்டுல்கருக்கு 2-ஆவது டெஸ்டில் ஓய்வு கொடுக்கப்பட்டால் கயூபுக்கு வாய்ப்புக் கிடைக்கலாம் டெண்டுல்கரின் அபாரமான துடுப்பாட்டத்தினாலும், இர்பான்பதானின் சிறப்பான பந்து வீச்சாலும் (11விக்கெட்) டாக்கா டெஸ்டில் இந்தியாவுக்கு வெற்றிகிடைத்தது.

# அவுஸ். - பாக். முதல் டெஸ்ட் பேர்த்தில் இன்று ஆரம்பம்

இன்சமாம் தலைமையிலான பாகிஸ்தான் கிரிக்கெட் அணி அவுஸ்திரேலியாவில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகளுக்கிடையேயான மூன்று டெஸ்ட் போட்டித் தொடரில் முதல் டெஸ்ட் பேர்த்நகரில் இன்று தொடங்குகின்றது. அவுஸ்திரேலிய அணி சமீபத்தில் நியூசிலாந்து அணிக்கு எதிரான இரண்டு டெஸ்டிலும் வென்று தொடரை கைப்பற்றியது. உள்ளூர் மைதானத்தில் அவுஸ். விளையாடுவதனால் அந்த அணிக்கு அதிக வாய்ப்பு உண்டு இரு அணிகளின் விபரம் வருமாறு: அவுஸ்திரேலியா:- பொண்டிங் (கப்டன்), ஹைடன், லாங்கர் மார்ட்டின், லீமேன், கிளார்க், கில்கிறிஸ்ட், வார்னே, கில்லஸ்பி, மெக்ராத், காஸ்பரோவிச், பெர்ட்லீ பாகிஸ்தான்:- இன்சமாம் (கப்டன), யாசீர் ஹமீது, சல்மான் பட், யூனுஸ்கான், யோகனா, சோயிப்மாலிக், அப்துல் ரசாக், கமரன் அக்மல் (விக்கெட் கீப்பர்), சோயிப் அக்தர், டேனிஷ்கனிரா, முகமதுசமி, அப்ரிடி, இம்ரான், பர்கத், ஆசிம்கமால், நவீத்-உல்-ஹசன் முகமது ஆசிப், முகமது கலீல்.

# கங்குலியின் அறிவிப்பு குறித்து கவாஸ்கர் சீற்றம்



(டாக்கா)

'சிட்டகாங் டெஸ்ட்டில் முன்னணி வீரர்கள் சிலருக்கு ஓய்வு கொடுத்து விட்டு, புதுமுகங்களுக்கு வாய்ப்பளிப்பது பற்றி பரிசீலிக்கிறேன்' என இந்திய அணியின் தலைவர் கங்குலி கூறியிருப்பதை சுனில் கவாஸ்கர் பலமாக ஆட்சேபித்துள்ளார்.

எதற்காக இந்த அறிவிப்பு என்று தெரியவில்லை. முன்னணி வீரர்களுக்கு எதற்காக ஓய்வு கொடுக்க வேண்டும்? டெஸ்ட் போட்டிகளைப் பொறுத்தவரை, எதிரணி சாதாரணமாக இருந்தாலும் கூட முழுக் கவனம் செலுத்தி விளையாட வேண்டும். வங்கதேச அணியும் கூட முழுத் திறமையுடன் கூடிய இந்திய அணியுடன் தான் விளையாட விரும்பும். இளம் வீரர்களை விளையாடச் சொல்வதற்குப் பதில் இந்தியா 'ஏ' அணியை அனுப்பியிருக்கலாமே?


இப்படிச் சொல்வதால்,இளம் வீரர்களுக்கு நான் எதிரானவன் இல்லை. டெஸ்ட் வாய்ப்பு என்பது திறமையடிப்படையில் கிடைக்க வேண்டுமே தவிர இப்படி கருணை அடிப்படையில் கிடைக்கக்கூடாது. ஒரு காலத்தில் இங்கிலாந்து, அவுஸ்திரேலியா அணிகள் இந்தியப் பயணம் என்றால் சீனியர் வீரர்களுக்கு ஓய்வு கொடுத்து விட்டு அடுத்தகட்ட இளம் வீரர்களைத் தான் அனுப்பி வைக்கும். இது எந்த அளவுக்கு அப்போதைய நமது வீரர்களைப் பாதித்தது தெரியுமா?

எந்த அணியாக இருந்தாலும் எதிரணி முழுப் பலத்துடன் இருக்க வேண்டும் என்று தான் விரும்புவார்கள்.வெற்றியோ, தோல்வியோ முழுப்பலத்துடன் கூடிய எதிரணியுடன் விளையாடுவதே திருப்தி. அதுவும் வங்கதேசம் போன்ற அணிகளுக்கு நமது சீனியர் வீரர்களுடன் விளையாடுவது மிகப்பெரிய அனுபவம். நிறையப் பாடம் கற்றுக்கொள்ள முடியும்.

வங்கதேசம் மீண்டும் ஒரு வழக்கமான தோல்வியைப் பெற்றிருக்கிறது. டெஸ்ட் கிரிக்கெட் அந்தஸ்து பெற்றாகிவிட்டது. ஆனாலும், அதற்குரிய பொறுப்பு அந்த அணி வீரர்களிடம் இல்லையே? வங்கதேசத்தின் தோல்விகள் தொடர்வதற்கு காரணம், தங்கள் தவறுகளில் இருந்து அந்த வீரர்கள் பாடம் கற்றுக் கொள்ளாமல் இருப்பதுதான்.

தாகா டெஸ்ட் பார்த்த போது இதைப் புரிந்து கொள்ள முடிந்தது. தலைவர் பஷார் உட்பட முன்னணி வீரர்கள் அனைவரும் இரு இன்னிங்ஸ்களிலும் ஒரேமாதிரி ஷாட் அடித்து ஆட்டமிழந்தனர்.

தங்கள் தவறுகளில் இருந்து பாடம் கற்றுக் கொள்ளாதவரை, தவறுகளைத் திருத்திக்கொள்ளாதவரை, முன்னேற்றம் காண்பது கடினமே. வங்கதேச வீரர்கள் உடனடியாகத் தங்கள் தவறுகளைத் திருத்திக் கொள்வார்கள் என்று நம்புகின்றேன்.



ஹைதராபாத்தில் நடந்த காட்சிக் கிரிக்கெட்போட்டியில் பங்கேற்க இந்திய அணி முன்னாள் கப்டன் அசாருதீன் தனது மனைவி சங்கீதா பிஜ்லானியுடன் இருப்பதை படத்தில் காணலாம். அருகில் டென்னிஸ் வீராங்கனை சானியா மிஸ்ரா(வலது) உள்ளார்.

## நிக்கிபோஜி இல்லை



(போர்ட்எலிசபெத்) தென்னாபிரிக்கா, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளர் நிக்கிபோஜி ஆடுவாரா என்பது சந்தேகமே எனத் தெரிவிக்கப்படுகிறது. நாளை போர்ட் எலிசபெத்தில் ஆரம்பமாகும் இந்த டெஸ்டில் காயம் காரணமாகவே நிக்கிபோஜி ஆடமுடியாத நிலை உருவாகியுள்ளது.

## சிம்பாப்வே கிரிக்கெட் அணியின்

# அனுசரணையாளர்கள் ஆதரவை விலக்கினர்

சிம்பாப்வே கிரிக்கெட் அணிக்கு ஆதரவு வழங்கும் பாட்டா, நிசான் ஓலட் முஸ்சுவால் நிறுவனங்கள் தமது ஆதரவை நிறுத்திக் கொள்ளப் போவதாக அறிவித்திருப்பதையடுத்து சிம்பாப்வே அணியினர் கடும் விசனத்துக்குள்ளாகியுள்ளனர்.

புதிய உடைகளை அறிமுகமாக்கி வழங்கும் பாட்டா நிறுவனம் பணக் கொடுக்கல் வாங்கல் பிரச்சினையால் ஏற்கனவே ஆதரவை மறுத்திருந்தது. அதன் பின்னர் புதிய ஆடை நிறுவனத்துடன் வீரர்கள் தொடர்பு கொண்டிருந்தனர்.

2001ஆம் ஆண்டு முதல் நிசான் நிறுவனம் ஆதரவு வழங்கி வந்தது.. அது வீரர்களுக்கும், அதிகாரிகளுக்கும் வாகனசேவைகளையும் காப்புறுதிகளையும் வழங்கியது.

ஓல்ட் முஸ்சுவால் பாரிய ஆதரவு வழங்கும் நிறுவனமாக இருந்தது. அது கிரிக்கெட் வீரர்களுக்கு மட்டுமன்றி கால்பந்தாட்ட வீரர்களுக்கும் ஆதரவு வழங்கியது.

இந்த ஆதரவுகளை இவை விலக்கிக் கொள்வது உறுதியாகிவிட்டதாக சபைத்தலைவர் பீற்றர் சிங்கொக்கா பத்திரிகை தெரிவித்துள்ளார். கடந்த ஏப்ரல் மாதம் முன்னாள் அணித்தலைவர் கீத்ஸ்ரீக் விலக்கப்பட்டதிலிருந்து இவர்களின் ஆதரவில் பிரச்சினைகள் ஏற்பட்ட வண்ணமே இருந்தன.

இது தொடர்பாகக் கருத்து தெரிவித்த ஸ்ரீக் இதில் ஆச்சரியப்பட வேண்டியது எதுவுமில்லை என்றார்.

# இதயப் பரிசோதனையின் பின்பே வீரர்களுக்கு விளையாட அனுமதி!

## சர்வதேச ஒலிம்பிக்குழு பரிந்துரை

அனைத்து விளையாட்டு வீரர்களுக்கும் கட்டாயம் இதயப்பரிசோதனை செய்த பிறகே விளையாட அனுமதிக்க வேண்டும் என்று சர்வதேச ஒலிம்பிக் குழு பரிந்துரை செய்துள்ளது.

பெங்களூரில் அண்மையில் நடந்த கால்பந்துப் போட்டியில் கோவா டெம்போ ஸ்போர்ட்ஸ் கிளப்பைச் சேர்ந்த பிரேசில் வீரர் கிறிஸ்டியானோ ஜூனியர் மைதானத்திலேயே மாரடைப்பு காரணமாக உயிரிழந்தார். இது ரசிகர்களைப் பெரும் வேதனையில் ஆழ்த்தியது.

ஆட்டத்தின்போது அவரைத் தள்ளிய எதிர் அணி கோல்கீப்பர் மீது கொலைப்பழி விழும் அளவுக்கு நிலைமை சென்று விட்டது. மருத்துவப் பிரிசோதனையில் அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டதை உறுதி செய்திருந்தாலும், அவருக்கு மாரடைப்பு நேரும் என்று யாரும் எதிர்பார்க்காததால் பெரிய சர்ச்சை ஏற்பட்டுவிட்டது.

இவர்மட்டுமல்ல, கடந்த ஆண்டு சர்வதேச பெடரேஷன் கால்பந்து போட்டியின்போது,காமரூன் நாட்டைச் சேர்ந்த மார்க் விவியன் ஃபோ ஆட்டக்களத்திலேயே மாரடைப்பு ஏற்பட்டு இறந்தார்.சுளுக்கு, தசைப் பிடிப்பு, சிராய்ப்பு, எழும்புமுறிவு, மயக்கம்,வாந்தி போன்ற சாதாரண அசௌகரியங்களுக்காகவே ஆட்டக்களத்தில் டாக்டர்கள் அல்லது பிசியோதெராபிஸ்டுகள் தயார் நிலையில் நிறுத்தப்படுகின்றனர்.

விளையாட்டு வீரர்கள் என்றாலே பொதுவாக திடகாத்திரமானவர்கள் என்பதால் அவர்களுக்கு மாரடைப்பு வரும் என்ற எதிர்பார்ப்பு இல்லாமல் இருந்தது. இனி எதிர்காலத்தில் இது தொடராது.

இலட்சத்தில் இரண்டு பேருக்குத் தான் மாரடைப்பு வரும் என ஆய்வுகள் தெரிவித்தாலும், களத்தில் ஒருவர் கூட இறக்கக்கூடாது என்பதே தங்கள் கவலை என்று சர்வதேச ஒலிம்பிக் குழு மருத்துவப்பிரிவுத் தலைவர் பாட்ரிக் ஷமாஷ் தெரிவித்தார்.

சர்வதேச போட்டிகளில் கூட ஆடி முடித்த பிறகே விளையாட்டு வீரர்களின் சிறுநீரைப் பரிசோதித்து அவர் போதை





மருந்து சாப்பிட்டிருக்கிறாரா? என்று பரிசோதிக்கின்றனர். மிக முக்கியமான போட்டிகளின்போது ஆட்டக்காரர்களுக்கு இதயத்துடிப்பு அதிகரிப்பும் சீராக இல்லாமல் இருப்பதும் பெரிதும் உணரப்படுவதில்லை. எனவே இதயப் பரிசோதனைக்கு இனி தீவிர கவனம் செலுத்தப்படும்.

விளையாட்டு வீரரின் குடும்பத்தவருக்கு சர்க்கரை வியாதி, இதய நோய், மூச்சிரைப்பு போன்றவை உள்ளனவா என்று கேட்கப்படும். அதன் அடிப்படையில் அவருடைய மருத்துவச் சோதனையில் அக்கறை செலுத்தப்படும் மாரடைப்பு வரும் வாய்ப்புள்ளவர்களுக்கு உரிய மருந்துவ ஆலோசனைகள் கூறப்படும் என்று ஷமாஷ் தெரிவித்தார்.

# சிறந்த ஐரோப்பிய வீரராக உக்ரேன் வீரர் சிங்சிங்கோ


உக்ரேனின் கால்பந்தாட்ட வீரர் அன்ரி சிங்சிங்கோ ஐரோப்பியாவின் 2004ஆம் ஆண்டிற்கான சிறந்த வீரர் என்ற விருதைப் பெறுகிறார்.

52 ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த பத்திரிகையாளர்களிடையில் நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் சிங்சிங்கோவுக்கு பலத்த ஆதரவு கிடைத்துள்ளது.

மிலான் அணியைச் சேர்ந்த 28 வயதான இவர் இத்தாலி அணியில் 1999ஆம் ஆண்டு இணைந்ததிலிருந்து சாதனைகளைப் படைத்துள்ளார்.

இவர் 175 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தையும், இவருக்கு அடுத்ததாக போர்த்துக்கல் வீரர் டெக்கோ 139 புள்ளிகளையும் பிரேசில் வீரர் றொனால்டோ 133 புள்ளிகளையும் பெற்றுள்ளனர்.

கடந்த வருடம் சிங்சிங்கோ 4ஆம் இடத்தைப்பெற்றார்.



டோக்கியோவில் உள்ள ஜோபோஹாமா நகரில் சிறந்த கால்பந்து வீரர்களுக்கான விருது வழங்கும் விழா நடந்தது. இதில் பிரேசில் வீரர் எமர்சனுக்கு தங்கப்பந்து விருது கிடைத்தது.



## சிந்தனைக்கு

எமது போராட்டம் எத்தனையோ சவால்களுக்கு ஈடு கொடுத்து தனது விடுதலைப் பயணத்தில் வெற்றி நடை போட முடிந்ததென்றால் அதற்கான அடிப்படைக் காரணம் எமது இலட்சிய உறுதிதான் என்பதை நான் திட்ட வட்டமாகக் கூறுவேன்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 16-12-2004
தொலைபேசி / தொலைநகல் 021-2283948,060-2213244
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com

## எரிக்கின் விஜயத்தின் பலன்?

நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சூல்ஹெய்ம் இலங்கைக்கு மற்றுமொரு விஜயத்தை மேற்கொண்டுள்ளார். இவ் விஜயத்தில் சிறிலங்கா அரச தரப்பினரையும், விடுதலைப்புலிகள் தரப்பையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவார் என்பது எதிர்பார்க்கத்தக்கதே.

ஆனால், எரிக்சூல்ஹெய்மின் தற்போதைய இலங்கை விஜயமானது எந்தளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பது கேள்விக்குரியதே. ஏனெனில், சமாதான முயற்சிகள் தொடர்பாக எரிக்சூல்ஹெய்மின் முயற்சிகள் எந்தளவிற்கு வெற்றியைத் தேடித்தரவல் லது என்பது குறித்து சந்தேகமே இதற்குக் காரணமாகும்.

ஏனெனில், சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க எரிக் சூல் ஹெய்மின் வருகை எந்தளவிற்கு உதவும் என்பது குறித்து இங்கு எதிர்வு கூறத் தேவையில்லை. ஏனெனில், நோர்வேத் தரப்பின் அறிவிப்பின் படியே சமாதான முயற்சிகள் முன்னேற்றம் காண்பதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாகத் தெரியவில்லை.

நோர்வேத் தரப்பின் தகவலின்படி, எரிக் சூல்ஹெய்மின் வருகையானது இரு தரப்பையும் நெருக்கமாக வைத்துக் கொள்ளும் நோக்கத்திலானது என்பது மட்டுமே. ஏனெனில், சமாதான முயற்சியில் மாற்றம் ஏற்படும் வகையில் அரசியல் சூழ்நிலையில் மாற்றம் எதுவும் ஏற்பட்டதாக இல்லை.

விடுதலைப்புலிகள் இயக்கத்தைப் பொறுத்து இது தனது நிலைப்பாட்டைத் தெளிவாகவே அறிவித்துவிட்டது. இது அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களினால் மட்டுமல்ல, தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்களின் மாவீரர் நாள் உரை மூலமும், நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சனுடான சந்திப்பின்போதும் தெளிவாகவே கூறப்பட்டது.

அதாவது, இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை தொடர்பான பேச்சுவார்த்தைகள் உடன் ஆரம்பிக்கப்பட வேண்டும். தமிழ் மக்கள் தொடர்ந்து அமைதியுமற்ற, யுத்தமுமற்றதொரு வெறுமையான சூழ்நிலைக்குள் சிறைப்பட்டுக்கிடக்க முடியாது. ஆகையினால், அரசாங்கம் புலிகளின் கொள்கைக்கு உடன் பதிலளிக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

ஆனால், ஆளும் தரப்பு இது குறித்து எந்தவித அக்கறையும் கட்டுவதாக இல்லை. புலிகளின் கோரிக்கைக்கு அரசாங்கத் தரப்பில் இருந்து இதுவரை உத்தியோகபூர்வமான அறிவிப்பு எதையும் வெளிவரவில்லை. கதிர்காமர் போன்றவர்கள் சில பத்திரிகைப் பேட்டிகளில் இது குறித்துப் பிரஸ்தாபித்திருப்பினும், அரசாங்கத்தின் நிலைப்பாடு இதுதான் என உறுதிப்படத் தெரிவிக்கவில்லை.

அதாவது, அரசாங்கம், பந்தை தனது கைகளில் வைத்துக் கொண்டுள்ளது. அதனைப் புலிகளின் பக்கம் எறிவதற்காக திரணி, ஆற்றல் என்பன அரசாங்கத்திடம் இருப்பதாகத் தெரியவில்லை. ஏனெனில், அந்த அளவிற்கு ஆளும் தரப்பு இனப்பிரச்சினை விவகாரத்தில் பிளவுபட்டு, பலவீனப்பட்டுப்போயுள்ளது.

ஆகையினால், சமாதான ஏற்பாட்டாளர்களினால் அரச தரப்பில் இருந்தும் விடுதலைப்புலிகளிடம் இருந்தும் கொண்டு சேர்ப்பதற்கு எதுவும் இருப்பதாக தெரிவிப்பதற்கில்லை. இதேசமயம், விடுதலைப்புலிகளும் நியாயமான தொரு நிலைப்பாட்டில் உறுதியாக நின்று கொண்டுள்ளனர். ஆகையினால், புலிகளிடம் எதிர்பார்ப்பதற்கு எதுவுமே இல்லை. இந்நிலையானது அரசியல்சூனியத்தை ஏற்படுத்துவது போன்றதொரு சூழ்நிலையையே தோற்றுவிப்பதாயுள்ளது.

இந்நிலையில் எரிக்சூல்ஹெய்மின் வருகையானது சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படுதல் தொடர்பாக எதனையும் சாதிக்காது விடினும், தற்போது நிலவும் ஒரு நிலையற்ற தன்மையை மேலும் மோசமாக்கிவிடாது காத்துக் கொள்வதற்குமானதாகவே இருக்க முடியும். இத்தகையதொரு முயற்சியே தற்பொழுது எரிக் சூல்ஹெய்மினால் மேற்கொள்ளப்பட்ட இலங்கை விஜயத்தின் நோக்கமாகும்.

ஆனால், நோர்வேத் தரப்பின் இம்முயற்சியானது எவ்வளவு காலத்திற்கு யுத்த நிறுத்தத்தையும், சமாதான முயற்சிகளையும் நீடித்து வைக்கக் கூடியதாக இருக்க முடியும்? சிறிலங்கா ஆட்சியாளருக்கு யுத்த நிறுத்தம் மட்டும் போதுமானதாக இருக்கலாம். ஆனால், தமிழ் மக்களின் பல்வேறு பிரச்சினைகளின் தீர்விற்கு யுத்த நிறுத்தம் மட்டும் போதுமானதல்ல. அதாவது, யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் அவல வாழ்க்கை நீடித்துச் செல்ல அனுமதிக்கமுடியாது. ஆகையினால், பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படாது. தொடர்ந்தும் யுத்த நிறுத்தத்தைப் பாதுகாத்தல் என்ற நோக்கிலான செயற்பாடுகள் மட்டும் பொருத்தப்படானதாக இருக்கமாட்டாது.

அவ்வாறு இல்லாது நோர்வேயின் விசேடதூதுவர் எரிக்சூல் ஹெய்ம் அரசாங்கத்திடம் இருந்து முன்னேற்றகரமான முடிவுகள் - அதாவது, கையில் உள்ள பந்தை விடுதலைப்புலிகளிடம் எறியத்தக்க வலுவுடையதான் திட்டம் ஒன்றுடன் எரிக் வருகையிலேயே அரசியற் சூழ்நிலையானது திடீர் மாற்றம் காணும் என துணிந்து கூறலாம். ஆனால், ஜே.வி.பி.யுடன் கூட்டுச் சேர்ந்திருக்கையில் அரசாங்கத்திடம் இருந்து இத்தகைய மாற்றங்கள் எதையும் எப்படி எதிர்பார்க்க முடியும்.

# கொழும்பு குண்டுத் தாக்குதல்
# பயங்கரவாதச் செயலென இந். கண்டனம்

தென்னிலங்கையின் தலைநகரமான கொழும்பில் அண்மையில் ஆடம்பர நிகழ்வு ஒன்றின் போது இந்திய நடிகர்களுக்கும் நிகழ்வுக்கும் எதிராக மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதல் ஒரு பயங்கரவாதச் செயலென்று இந்தியத் தூதுவரகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பொன்றில் தெரிவித்துள்ளது.

அரச தரப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வினை ஆளும் தரப்புப் பிரதிநிதிகளாக இருக்கும் பௌத்த பேரின வாதிகளும் ஜே.வி.பி யினரும் கடுமையாக எதிர்த்து வந்தனர். இதன் உச்சக்கட்டமாக இந்த நிகழ்வுக்கு எதிராக இவர்களால் கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதுடன் ஊடகவியளாளர் ஒருவரும் அண்மையில் திருமணமான நட்சத்திர விடுதியின் ஊழியர் ஒருவரும் கொல்லப்பட்டனர். அரச தரப்பினரால் அரச தரப்பு நிகழ்விற்கு மேற்கொள்ளப்பட்ட கைக் குண்டுத்தாக்குதலை இந்திய அரசு பயங்கரவாதம் என்று சித்தரித்துள்ளமை பொதுமக்கள் மத்தியில் பலத்த சந்தேகங்களை உண்டு பண்ணியுள்ளது. இந்தியா பயங்கரவாதம் என்று ஆளும் தரப்பினைக் குறிப்பிடுகின்றதா அல்லது இலங்கையின் தேசப் பிரேமிகளான ஜே.வி.பியினரைப் பயங்கரவாதிகள் என்று சித்தரிக்கின்றதா என்ற சந்தேகம் தற்போது எழுந்துள்ளது.

இந்தியா பௌத்த சிங்களவர்களையும் சிங்கள அரசியல் தலைமைகளையும் பயங்கரவாதி என்று சொல்ல முற்படுகின்றதா என்ற வினாவும் பரவலாக எழுந்துள்ளதாகத் தெரிகிறது.

### இலங்கை...

அபிலாசைகளை அறிந்து கொள்ள் வேண்டியது அவசியம் என்றும் மக்களின் விருப்பங்களை தெரிந்து கொண்டால் மட்டுமே நிலையான தீர்வை ஏற்படுத்த முடியும் என்றும் குறிப்பிட்டார்.

அளவிடுகை மூலம் மக்களின் விருப்பங்களை அறிந்து கொள்ள முடியும் இந்த அளவிடுகை சமாதான முயற்சி தொடர்பில் மக்களின் அபிப்பிராயத்தை தெளிவாக வெளிப்படுத்தும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். .21 மாவட்டங்களில் 3500 பேரிடம் பெறப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் இந்த அளவிடுகை தயாரிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க உதவி நிறுவனத்தின் நிதியுதவியுடன் இந்த அளவிடுகை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நடைமுறை சமாதான முன்னெடுப்பு தொடர்பில் மக்கள் மத்தியில் காணப்படும் அபிப்பிராயங்களை அறியும் வகையில் இந்த அளவிடுகை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந் அளவிடுகை மூலம் சமூகங்களிடையில் நம்பிக்கை கட்டி வளர்க்கப்பட வேண்டிய தேவை இருப்பதாகவும் சமாதான நடவடிக்கைகள் குறித்து பொது மக்களுக்கு போதுமான அறிவூட்டல் மேற்கொள்ளப்பட வில்லை என்பது தெரிய வந்துள்ளதாகவும் அளவீட்டாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

### அவசியமான...

பாளருடன் நீண்ட நேரம் கலந்துரையாடினோம் இவ்வுரையாடல் பற்றி கொழும்பில் சனாதிபதிக்கு இரவு எடுத்துக் கூறுவேன். நாங்கள் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பது பற்றியும், போர் நிறுத்த உடன் படிக்கையுடன் தொடர்புடைய விடயங்கள் பற்றியும் நீண்ட நேரம் கலந்துரையாடினோம்.சமாதான முயற்சிகள் மிகவும் தீர்க்கமான காலகட்டத்திலுள்ளது. இரு பகுதியினரும் போர் நிறுத்த உடன் படிக்கை பற்றியும் தமது பொறுப்புக்கள் பற்றியும் மீண்டும் வெளிப் படுத்தினர்.இரு பகுதியினரும் பரஸ்பரம் ஒருவரையொருவர் குற்றம் சுமத்துகின்றனர். இரு பகுதியினரிடையேயும் பரஸ்பரம் நம்பிக்கை கட்டி எழுப்பப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார். தான் அரசிடமிருந்து குறிப்பிடத்தக்க விசேட செய்தி எதனையும் கொண்டுவரவில்லை எனவும் குறிப்பிட்டார்.

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் தலைமையிலான குழுவினருக்கும் நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக்சூல் ஹெய்ம் அவர்கள் உள்ளிட்ட குழுவினருக்கும் இடையிலான சந்திப்பு கிளிநொச்சியில் நேற்று பிற்பகல் 2.00 மணிக்கு சமாதான செயலகத்தில் ஆரம்பமாகி பிற்பகல் 3.30 மணிவரை நீடித்தது. முன்னதாக நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சூல்கெஹம் கொழும்பிலிருந்து பயணித்த விமானப்படையின் உலங்கு வானூர்தி சீரற்ற காலநிலை காரணமாக அனுராதபுரத்தில் தரையிறங்கிது.

இதனைத் தொடர்ந்து தரைமார்க்கமாக கிளிநொச்சியை வந்தடைந்த எரிக்சூல்ஹெய்ம் புலிகளுடனான சந்திப்பை முடித்து கிளிநொச்சியிலிருந்து பிற்பகல் 4.00 மணிக்கு உலங்குவானூர்த்தி மூலம் கொழும்புக்குச் சென்றார்.

### கைக்குண்டு...

வெளியிடுமாறு அவசர வேண்டுகோள் ஒன்றை ஜாதிக ஹெல உறுமய பாராளுமன்றக் குழுத் தலைவர் அத்துரலியே ரத்தினதேரர் சனாதிபதிக்கு விடுத்துள்ளார்.

சனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றிலேயே அவர் இந்த அவசர வேண்டுகோளை விடுத்துள்ளார்.

இக் குண்டு வெடிப்பில் இருவர் கொல்லப்பட்டும் பலர் படுகாயமடைந்தமை தெரிந்ததே.

### கிளிநொச்சி...

ஈகச் சுடரினை ஏற்றி வைக்க மலர்மாலையினைக் காவல்துறை கண்காணிப்பாளர் குணரெட்ணம் அவர்களும் கடற்புலிகள் பொறுப்பாளர்களில் ஒரவரான கருணாகரன் அவர்களும் அரசியல்துறை மகளிர் நிர்வாகப் பொறுப்பாளர் நளினி அவர்களும் அணிவித்தனர்.

தொடர்ந்து அகவணக்கமும், வீரவணக்க உரையும் நடைபெற்றது. வீரவணக்க உரையினை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம் அவர்களும் கிளி.மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவை செயலாளர் பசுபதிப்பிள்ளை, கடற் புலிகளின் துணைத் தளபதி செழியன் ரி.ரி.என் ஊடகப் பொறுப் பாளர் மிரேஸ், அரசறிவியல் கல்லூரிப் பொறுப்பாளர் அரசண்ணா ஆகியோர் நிகழ்த்தினர்.

தொடர்ந்து மலர் வணக்கம் நடைபெற்றது. தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த தளபதியும் புலனாய்வுத்துறைப் பொறுப்பாளருமான பொட்டு அம்மான் மலர் மாலை அணிவித்து மலர் வணக்கத்தினை ஆரம்பித்து வைத்தார். அடுத்து பொறுப்பாளர்கள், போராளிகள், காவல்துறையினர், மற்றும் பொதுமக்கள் மலரஞ்சலி செலுத்தினர். அதனைத் தொடர்ந்து லெப்.கேணல் மறவன் அவர்களின் வித்துடல் அலங்கரிக்கப்பட்ட விசேட ஊர்தியில் ஊர்வலமாக அவரது சொந்த இடமான தாளையடிக்கு எடுத்துச் செல்லப் பெற்றது.

இதேவேளை லெப்.கேணல் மறவன் மாஸ்ரருடைய வித்துடல் நேற்றுக் காலை 7.00 மணிக்கு செம்மலை மகாவித்தியாலயத்திலும், காலை 10.00 மணி தொடக்கம் 12.00 மணிவரை முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்திலும் மக்களின் இறுதி வணக்கத்திற்காக வைக்கப்பட்டது. இறுதி வணக்க நிகழ்வில் பெருமளவு மக்களும், போராளிகளும் கலந்து கொண்டனர். (சோ.சு.20)

### சமாதான...

வலியுறுத்தப்பட்டுள்ளது.

சனாதிபதி முன்னெடுக்கும் சமாதான முயற்சிகளுக்கும் நோர்வே அனுசரணைப்பணிக்கும் தாம் பூரண ஆதரவு வழங்குவதாகவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டோக்கியோ உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்திற்கு கூட்டுத் தலைமை வகித்த நாடுகளான ஜப்பான் சார்பில் ஜப்பானிய தூதுவர் அக்கியோசூடா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் சார்பில் நெதர்லாந்து தூதுவர் சூசன் பிலான்கரி அமெரிக்கத் தூதுவர் ஜெப்ரி லாங்ஸ்ரட் ஆகியோர் கையொப்பமிட்டு கூட்டாக இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளனர்.

சிறிலங்கா அரசாங்கத்தின் சமாதான நடவடிக்கை தொடர்பான அசமந்தபோக்கு மற்றும் ஜே.வி.பியின் சமாதான விரோத போக்கிற்கு எதிராக சர்வதேச சமூகத்தின் கவனம் திரும்பியுள்ளதையே இந்த அறிக்கை விளக்குவதாக அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை சனாதிபதி சந்திரிகாவுடனான முக்கிய சந்திப்பொன்றின் பின்னர் இந்தக் காரசாரமான அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கையில் நடைபெற்றுவரும் சமாதான முயற்சிக்கு எதிராகவும், நோர்வே நாட்டின் அனுசரணைக்கு எதிராகவும் ஜே.வி.பியின் முக்கிய நடவடிக்கைகள் குறித்து சனாதிபதியிடம் தமது கடும் விசனத்தை இப்பிரதி நிதிகள் தெரி வித்துள்ளதுடன், சனாதிபதி இதுதொடர்பாகக் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அப் பிரதிநிதிகள் வலியுறுத்தி உள்ளனர்.

இதேவேளை இதுவரை இப்படியான ஒரு அறிக்கை எந்தவொரு சர்வதேச சமூகத்திடமிருந்தோ அன்றி தனிப்பட்ட நாடுகளிடமிருந்தோ அரசாங்கத்தின் மீது ஒரு அழுத்தத்தைப் பிரயோகிக்கும் நோக்கில் அல்லது அதன் பங்காளிக்கட்சியாக ஜே.வி.பிக்கு எதிராக இப்படியான ஒரு கடும் தொணியில் இதுவரை எந்தவொரு அறிக்கையோ பத்திரிகைகள் குறிப்போ வெளியிடப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

# விமல்வீரவன்சவிற்கெதிராக ரவிகருணாநாயக்க வழக்கு

கொழும்பு குதிரைப்பந்தய திடலில் நடைபெற்ற குண்டு வெடிப்பிற்கும் தனக்கும் தொடர்பு இருப்பதாக ஜே.வி.பி. பிரச்சார செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்த உண்மைக்குப் புறம்பான குற்றச்சாட்டு தொடர்பில் நட்டஈடு கோரி வழக்கு தாக்கல் செய்யவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ரவிகருணநாயக்கா தெரிவித்துள்ளார்.

விமல் வீரவன்சவிடமிருந்து 1000 மில்லியன் ரூபா நட்டஈடு கோரி நாளை இந்த வழக்கை தாக்கல் செய்யவுள்ளதாக ரவி கருணநாயக்க கூறியுள்ளார்.

தனக்கும் குண்டு வெடிப்பிற்கும் தொடர்பு இருப்பதாக தவறான குற்றச்சாட்டை முன்வைத்து தனது பெயரிற்கு களங்கம் ஏற்படுத்த விமல்வீரவன்ச முற்பட்டுள்ளதாகவும் இதற்கு எதிராக தான் நட்டஈடுகோரி வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (32)

## நேர்முகத்தேர்வு நடைபெறாது

'தொண்டர்களை நிரந்தரமாக்குவதற்காக நாளை நடைபெறவிருந்த 2 ஆவது நேர்முகத்தேர்வு நடைபெறமாட்டாது என கிளிநொச்சி பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## மண்சரிவில் நால்வர் பலி

(கொழும்பு)

வெலிமடையில் ஏற்பட்ட மண்சரிவினால் ஒன்றரை வயதுக் குழந்தை உட்பட நால்வர் பலியாகி உள்ளனர். நூறு குடும்பங்கள் பாதுகாப்புக் கருதி வேறு இடங்களுக்கு இடம் பெயர்ந்துள்ளனர்.

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவது குறித்து ஆராய்வு

(அலுவலக செய்தியாளர்)

வெள்ளத்தினால் பாதிக்கப்பெற்ற மக்களுக்கான உடனடி உதவிகள் வழங்குவதற்கான அவசர கூட்டம் நேற்றுப்பிற்பகல் 2.00 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் நடைபெற்றது.

இணையத்தலைவர் இ.கணேசபிள்ளை தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் மேலதிக அரச அதிபர் நா.வேதநாயகன், கிளிகரைச்சி, பூநகரி, கண்டாவளை, பளைபிரதேசச் செயலர்கள், அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் மற்றும் வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவன பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டு தங்கள் நிறுவனங்கள் மூலம் வெள்ளத்தால் பாதிக்கப்பெற்ற மக்களுக்கு வழங்கக்கூடிய உதவிகள் குறித்து தெரியப்படுத்தினர். வெள்ளத்தால் பாதிக்கப்பெற்ற மக்களுக்கான உதவிகளை வழங்க அனைத்து நிறுவனத்தினரும் ஒன்றிணைந்து செயற்பட உடன் முன்வர வேண்டும் என இணையத் தலைவர் சகல அரசசார்பற்ற வெளிநாட்டு உள்நாட்டு பிரதிநிதிகளையும் வேண்டிக்கொண்டார். (சோ,கு)

## தெற்கின்......

*எரிக்சூல்ஹெய்ம் சமாதானம் நெருக்கடிநிலையை அடைந்துள்ளது என கூறுகிறார். இவ்வாறு முறிவடையும் நிலை உருவாகுமா?*

எம்மைப் பொறுத்தவரையில் தற்போது நடைபெறுகின்ற சம்பவங்கள்,நிகழ்வுகள் மற்றும் தெற்கிலே இருந்து வருகின்ற சமாதானத்திற்கு விரோதமான செய்திகள் கருத்துக்கள் என்பவற்றை வைத்துப் பார்க்கின்ற போது பேச்சுவார்த்தை சமாதான முன்னெடுப்பு என்பன ஆக்கபூர்வமாக முன்னெடுக்கப்படும் என்ற நம்பிக்கையை எமக்கு ஏற்படுத்தவில்லை.

*இந்த நெருக்கடி நிலையை என்ன வகையில் தீர்க்க முடியும் என நீங்கள் நோர்வே ஊடாக அரசுக்கு ஆலோசனை தெரிவித்துள்ளீர்கள்?*

சமாதான முயற்சி மீதும் அமைதிமுயற்சி மீதும் மக்கள் வைத்திருந்த நம்பிக்கைகள் தகர்ந்திருக்கிறது. மக்கள் பொறுமை இழந்திருக்கிறார்கள். இந்த நிலையில் மக்களுக்கு நம்பிக்கையை கட்டியெழுப்ப வேண்டும். அதற்காக மக்களின் அவசர மனிதாபிமான பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டு ஆக்கபூர்வமான செயற்பாடுகளைசெய்வதுதான் எமது மக்களுக்கு நம்பிக்கையை கட்டியெழுப்ப உதவும் அந்தவகையில் எமது தேசியத்தலைவர் இந்த நிலைப்பாட்டை விளக்கி அரசாங்கத்துக்கு அவசர வேண்டுகோளை தனது உரையில் வெளிப்படுத்தியிருக்கிறார்.இதற்கு சாதகமான பதிலை தெற்கில் இருந்து விரைவாக பெற்றுத் தருவதற்கூடாகத்தான் இந்த நிலைமையை சீராக்க முடியும் என நாங்கள் இன்று நோர்வே அனுசரணையாளர்கள் ஊடாக மீண்டும் ஆணித்தரமாக வலியுறுத்தியிருக்கிறோம்.

*உங்களால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கான பதிலை தாம் இவ்வளவு நாட்களுக்குள் தருவோம் என்று காலக்கெடு எதனையும் தந்திருக்கிறார்களா.*

நோர்வே அனுசரணையாளர்களும் பெரிய நம்பிக்கையோடு தங்களுடைய நிலைப்பாட்டை தெரிவித்ததுபோல் எமக்குத் தெரியவில்லை. அவர்கள் கடுமையான முயற்சி எடுப்பதுபோலத் தெரிகிறது. தெற்கில் அரசாங்கத்திடம் இருந்து சாதகமான பதில் கிடைக்கும் என்ற நம்பிக்கையை அவர்களால் தரமுடியவில்லை.

*இது பற்றி உங்களது நிலைப்பாடு, எதிர்பார்ப்பு எப்படியிருக்கிறது?.*

இன்றைய சந்திப்பின் மூலம் எந்தவிதமான நம்பிக்கையையும் ஏற்படுத்தவில்லை. என்று தான் நான் நினைக்கிறேன்.

*நம்பிக்கையை ஏற்படுத்தப் படவில்லை என்கிறீர்கள் அப்படியானால் உங்களது அடுத்த கட்ட நடவடிக்கை என்ன?*

மக்கள் தங்களது உரிமைகளை தமது நாளாந்த வாழ்வியல் நெருக்கடிகளுக்குள் தீர்வுகாண இன்று போராட்ட முன்னெடுப்புகளை முன்னெடுத்து வருகிறார்கள் மக்களுடைய போராட்ட முன்னெடுப்புகளுக்கு மதிப்பளித்து அரசாங்கம் சில விடயங்களுக்கு தீர்வு காணவேண்டும் என்பது தான் எதிர்பார்ப்பு இதைநாம் இன்றும் வலியுறுத்தியிருக்கிறோம். ஆகவே எதிர்வரும் நாட்களில் மக்கள் தமது கோரிக்கைகளையும் நிலைப்பாடுகளையும் தமது அபிலாசைகளையும் வெளிப்படுத்துகின்ற ஒரு சூழல் தோன்றிக் கொண்டு வருகிறது. என்பதைத் தான் எம்மால் உணரமுடிகிறது. இதற்கு இராணுவம் அண்மைக் காலத்தில் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகள் வன்முறைகள் என்பவற்றைத்தவிர்த்து யுத்த நிறுத்தசூழலுக்கு களங்கம் ஏற்படாது பார்த்துக்கொள்ள வேண்டும் என்பதை மீண்டும் சர்வதேச அனுசரணையாளர்களுக்கும் கண்காணிப்பாளர்களுக்கும் வலியுறுத்தி இருக்கிறோம்.

*தற்போது போர்நிறுத்தசூழல் எப்படி இருக்கிறது?*

போர்நிறுத்த சூழல் மிகுந்த நெருக்கடி நிலைக்குள்ளாக்கப்பட்டுள்ளது என்பதை அனைவரும் அறிவீர்கள் அண்மைய நாட்களில் மன்னாரில், வவுனியாவில், திருகோணமலையில், யாழ்ப்பாணத்தில் எனத் தமிழர் தாயகப் பகுதிகளில் நடைபெற்ற சம்பவங்கள் போர்நிறுத்த சூழலுக்கு மிகுந்த நெருக்கடியை ஏற்படுத்தியிருக்கிறது

குறிப்பாக கண்காணிப்புக்குழு உறுப்பினர்களின் செயற்பாடுகளுக்கு மதிப்பளிக்காது நடந்துகொண்ட முறைகளை நாம் நோர்வே அனுசரணையாளர்களுக்கு தெளிவாக்கி இருக்கிறோம். எனவே படைத்தரப்பிடம் இருந்தும் அரசாங்கத்தரப்பிடம் இருந்தும் யுத்தநிறுத்த சூழலை பேணுவதற்கான உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்தி பெறவேண்டும் அதற்கான உத்தரவாதத்தை எதிர்காலத்தில் எமக்குத் தரவேண்டும் என்பதை நாம் அவர்களிடம் வலியுறுத்தி இருக்கின்றோம்.

*இவ்வாறான கெடுபிடிகள் கடந்த காலத்துடன் ஒப்பிடும் போது இம்முறை அதிகரித்து வந்துகொண்டிருக்கின்றது. இது பற்றி?*

இது புதிய அரசாங்கம் பொறுப்பேற்றுக்கொண்டதன் பின்னர் இந்நிலை மோசமடைந்திருக்கிறது.படைத்தரப்பினர் அத்துமீறி யுத்த நிறுத்த உடன்பாடுகளை மீறி நடந்துகொள்கின்ற தன்மை அதிகரித்துள்ளன. இந்நிலைமைகளை வைத்துப்பார்க்கின்ற போது படைத்தரப்பினர் இந்த யுத்த நிறுத்த சூழலை விரும்பவில்லை என்றே தெரிகிறது. ஆகவே இதனையும், இன்றைய சந்திப்பில் நாம் நோர்வே அனுசரணையாளர் ஊடாக சர்வதேச கண்காணிப்பாளர்களுக்குத் தெளிவுபடுத்தியிருக்கிறோம். இவர்கள் அரசின் கவனத்துக்கும், சர்வதேச சமூகத்தின் கவனத்துக்கும் இதனை கொண்டு செல்வார்கள் என்றே நாம் நம்புகின்றோம்.

*வடகிழக்குப் பகுதிகளில் இராணுவம் யுத்தத்தை நோக்கிய போக்கில் செயற்படுவதாக கூறுகின்றீர்கள். அதேபோல விடுதலைப்புலிகளும் யுத்தத்துக்கான ஆயத்தங்களை மேற்கொள்வதாகக் கூறப்படுகின்றது?*

இந்தக் கருத்து தவறு. விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரையில் எப்பொழுதிலும் எமது தேசத்தின் மீதும், மக்கள் மீதும் வன்முறையைக் கட்டவிழ்த்துவிடுகின்ற போதும் யுத்தம் ஏவிவிடப்படுகின்ற போது அதை எதிர்கொண்டு எங்கள் தேசத்தையும், மக்களையும் தற்காத்துக் கொள்கின்ற பொறுப்பில் இருந்து நாம் எப்போதும் விலகமாட்டோம். இந்தக் கடமையை நாம் செய்வதற்கு எப்போதும் உறுதியுடன் இருக்கிறோம். இதில் எந்த மாற்றமும் இல்லை. ஆனால் படைத்தரப்பில் தான் யுத்தத்திற்கான முன்நகர்வுகள் உள்ளன. பாதுகாப்புச் செலவுக்கு அண்மைய காலத்தை விட இம்முறை அதிகமான நிதியை அரசாங்கம் ஒதுக்கியுள்ளது. அதை விட இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் படை ஒத்திகைகள், புதிய காவலரண்களை அமைத்தல், மக்கள் மீதான சோதனைக் கெடுபிடிகள் என்பவற்றை அதிகரிததிருக்கின்றார்கள். அத்தோடு ஏனைய நாடுகளுடன் இராணுவ ஒப்பந்தங்களையும், இராணுவ ஒத்திகைகளையும் செய்கின்ற போக்குகளும், அண்மைய காலங்களில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இவை அனைத்துமே எமது மக்களுக்கு அரசும், அதன் படைகளும் ஒரு யுத்த சூழலுக்குள் நகர்வது போலவே தோற்றமளிக்கிறது. இதுதான் எங்களது கணிப்பு.

*24 ஆம்திகதி விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தத்தை அறிவித்து மூன்று வருடம் நிறைவடைகிறது. இதை நம்பி நீங்கள் மக்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?*

நாங்கள் எங்களது மக்களுக்குத் தெளிவுபடுத்தியிருக்கிறோம். எங்களுடைய தலைவரின் மாவீரர் தின உரையிலே இன்றைய நிலைப்பாடுகள் மற்றும் எமது நிலைப்பாடுகள் சம்பந்தமாகவும், மிகவும் தெளிவாக எங்கள் கருத்துக்களை முன்வைத்திருக்கிறார். அந்த அடிப்படையில் மக்கள் இன்றைய சூழலை தெளிவாக விளங்கிக்கொண்டிருக்கிறார்கள். அண்மைக்காலத்தில் மக்கள் தமது உரிமைகளையும் தமது அன்றாடப் பிரச்சினைகளுக்கான தீர்வை வேண்டியே தமது எதிர்ப்புக்களை காட்டி வருகின்றார்கள். இனிவரும் காலத்தில் இது இன்னும் தீவிரம் அடையும் என்றுதான் நாம் நம்புகிறோம்.

*நோர்வே மத்தியஸ்தம் வகிக்கும் அதேவேளை சமாதானப் பேச்சுக்களுக்கு குழப்பம் ஏற்படுத்துகின்ற ஜே.வி.பி போன்ற அமைப்புக்கு நிதிவழங்கி இருக்கின்றார்கள். ?*

நோர்வேயின் அனுசரணை வேண்டாம் என்று எதிர்க்கின்ற இந்த அமைப்பு வெளிநாட்டு நிதியைப் பெற்று இரட்டை நாடகம் ஆடுகின்றது.

*இது பற்றி நீங்கள் ஏதாவது தெளிவுபடுத்தி இருக்கிறீர்களா?*

இது பற்றி இன்றைய சந்திப்பில் தெளிவுபடுத்தியிருக்கிறோம். குறிப்பாக நோர்வே மாத்திரமல்ல சர்வதேச சமூகம் ஏற்கனவே எடுத்த நிலைப்பாடுகளில் தளர்வை ஏற்படுத்துவது போல உள்ளது என எங்கள் கண்டனத்தை நோர்வேத் தரப்பினர்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறோம்.

சர்வதேச சமூகம் முன்னர் என்ன நிலைப்பாடுகளை எடுத்ததோ அதாவது சமாதான முன்னெடுப்புக்கள் தொடங்கப்பட்டு அந்த முன்னேற்றத்தின் அடிப்படையில் சர்வதேச உதவிகள் இங்கு கிடைக்கப்படும் என்ற அந்த நிலைப்பாட்டில் எந்த மாற்றத்தையும் கொண்டுவரக்கூடாது என்பதை மீண்டும் வலியுறுத்தியிருக்கிறோம். அப்படியான தளர்வுப்போக்குகள் மீண்டும் தெற்கில், சமாதான முயற்சிகளை சீர்குலைப்பதற்கான இத்தகைய சக்திகளுக்கு வலுச்சேர்ப்பதாகவே அமையும். தலைவர் தனது உரையிலே தெளிவாக சர்வதேச சமூகத்திடம் வேண்டிக்கொண்டிருக்கிறார். இலங்கைக் தீவில் பிரச்சினைக்குத் தீர்வு காண்கின்ற ஒரு நல்லதீர்வைக் கொண்டுவருவதற்கு ஆர்வமுள்ள சர்வதேச நாடுகள் இதற்கான அழுத்தத்தைப் பிரயோகித்து. இலங்கை அரசாங்கத்தை பேச்சு மேசைக்கு கொண்டுவரவேண்டும். இதன் மூலம் தமிழ்மக்களுக்கான நிரந்தரத் தீர்வைக்கொண்டு வருவதற்கு உதவவேண்டும் என்பதை எமது தலைவர் மாவீரர் தின உரையில் வேண்டி இருந்தார். அந்த நிலைப்பாட்டை மீண்டும் எமது தலைமைப்பீடம் சார்பாகவும், தலைவர் சார்பாகவும் இன்று வலியுறுத்தியிருக்கிறோம்.

*மாவீரர் தின உரையில் தலைவர் விடுத்த வேண்டுதலுக்கு அரசதரப்பில் இருந்து எந்தவிதமான சாதகமான பதிலும் கிடைக்கவில்லை. ஆனால் சர்வதேச சமூகத்திடம் இருந்து நீங்கள் எதிர்பார்த்த நல்ல சமிக்ஞைகள் ஏதும் கிடைத்திருக்கிறதா?*

எங்களைப் பொறுத்தவரை சர்வதேச சமூகமும் எமது தலைவரது நிலைப்பாட்டை முழுமையாக ஆதரித்திருக்கிறார்கள். ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் போலவே வெளிப்பாடுகள் இருக்கிறது. ஏனெனில் ஒரு நியாயமான நிலைப்பாட்டை எங்கள் தலைவர் முன்வைத்திருக்கிறார். ஏனெனில் கடந்தகாலங்களில் நாம் எடுத்துக் கொண்ட முயற்சிகள் இன்றைய சூழ்நிலைகள் எல்லாவற்றையும் வைத்து இன்றைய சூழலுடன் அவற்றைத் தெளிவாக்கி எதிர்காலத்தில் நாங்கள் மேற்கொள்ள வேண்டிய நிலைப்பாடுகள் தொடர்பாகவும் தலைவர் தெளிவாக கூறியிருக்கிறார். அதேவேளை சமாதான முன்னெடுப்புகள் பற்றிய தனது பற்றுறுதியையும் வெளிப்படுத்தியிருக்கிறார். அதாவது விரைவில் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படவேண்டும் என்பதையும் ஆக்கபூர்வமான முடிவுகள் எடுக்கப்படவேண்டும் என்பதையும் வலியுறுத்தியிருக்கிறார். அந்த வகையில் தலைவரின் நிலைப்பாட்டை சர்வதேச சமூகம் மிகவும் தெளிவாகப் புரிந்து அதை ஏற்றுக்கொண்டிருக்கிறது.

*போர் நிறுத்தம் நெருக்கடியான நிலையை அடைந்திருப்பதாக சூல்ஹெய்ம் கூறினார். நீங்கள் போர் நிறுத்த ஒப்பந்தத்தில் இருந்து விலகுவதாகக் கூறினீர்களா?*

எம்மைப்பொறுத்தவரையில் போர்உடன்படிக்கையில் அண்மைக்காலத்தில் படைத்தரப்பு ஏற்படுத்திய நெருக்கடிகள் பற்றி தெட்டத்தெளிவாக விலாவாரியாக விளக்கியிருந்தோம்.

*ஒரு யுத்தம் அல்லாத விடுதலைப்போராட்டத்தை எந்த முறையில் கொண்டு செல்வது?*

யுத்தம் இல்லாத விடுதலைப் போராட்டத்தைக் கொண்டு செல்வது எமது கைகளில் இல்லை. ஏனெனில் தமிழர் தாயகப்பகுதியின் பல பகுதிகளை இராணுவம் ஆக்கிரமித்திருக்கிறது. அத்துடன் மக்கள் மீது இராணுவ நெருக்குவாரங்களை அதிகரித்திருக்கிறது. மக்கள் இவற்றுக்கான எதிர்ப்பைக் காட்டி வருகின்றனர். இது மறுதலிக்கப்பட்டு இராணுவம் வன்முறையில் இறங்கினால் நிலைமை மோசமடையும். அந்த நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமை சில தீர்க்கமான முடிவை எடுக்கும்.

*யுத்த நிறுத்த உடன்படிக்கையின் படி 14 நாட்கள் அவகாசம் கிடைக்குமா?*

இரண்டு தரப்புக்குமே அந்தப் பொறுப்பு இருக்கிறது என்றார்.

(லோ, தீ)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.